# சிலாங்கூர் இன்று

இலவசம்

SMART SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

திருவள்ளுவர் ஆண்டு 2051 / சார்வரி ஆண்டு பங்குனி மாதம் / மார்ச் 3/2021 MARCH 3/2021


# நம்பிக்கையளிக்கும் ஒரே ஊசி

கடந்து ஓர் ஆண்டாக நாட்டையும் மக்களையும் ஆட்டிப்படைக்கும் மாபெரும் அழிவு சக்தியாக உருவெடுத்துள்ளது கோரோனா வைரஸ். அதன் தாக்கத்தைத் தணிக்க உலக மக்களின் கைகளுக்குக் கிடைத்துள்ள ஒரு பிரம்மாஸ்திரமான, பைசர் - பயோண்டெக் ஊசி மருந்து மலேசியாவுக்குக் கடந்த 21ந் தேதி வந்து சேர்ந்தது.

இந்த ஊசியின் பயன்பாடு பல பக்க விளைவுகளை உருவாக்கும் என்று பரவலான தப்பு பிரச்சாரம் காரணமாகப் பொது மக்களிடம் எழுந்துள்ள ஐயப்பாடுகளுக்கு விடை கொடுக்கும் வண்ணமாகச் சிலாங்கூர் மாநில மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி மற்றும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள். மாநில சிறப்பு பாதுகாப்பு குழு உறுப்பினர்கள். மாநில முன்னணி சுகாதாரக் குழு உறுப்பினர்களைக் கொண்ட 42பேர் கடந்த மாதம் 25ந் திகதி ஷா அலாம் மருத்துவமனையில் மாநிலத்தின் முதல் நபர்களாக பைசர் - பயோண்டெக் தடுப்பூசியைப் பெற்று கொண்டனர்.

இது எடுத்துக்காட்டான தலைமைத்துவத்தின் பிரதிபலிப்பாகும். இதனால் மக்களுக்கு இந்த தடுப்பூசி மீது ஏற்பட்டுள்ள ஐயப்பாடுகளை நீக்கி, அவர்கள் தயங்காமல் தடுப்பூசிகளைப் பெற முன் வருவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார் மாநிலச் சுகாதாரத்துறை ஆட்சிக்குழு உறுப்பினருமான டாக்டர். சித்தி மரியா





'நாடி' கடனுதவித் திட்டத்திற்கு 419 பேர் விண்ணப்பம் — பக்கம் 5

நகைகளை அடகு வைக்கும் போது கவனம் தேவை- போலீசார் — பக்கம் 11

உயர்கல்வி மாணவர் வெகுமதி திட்டத்திற்கு விரைந்து — பக்கம் 14

ஹிஜ்ரா கடனுதவித் திட்டத்திற்கான விண்ணப்பப் படிவம் பெறலாம் — பக்கம் 15



selangor kini mar 2021.indd 1 04-Mar-21 4:40:46 PM

# மக்கள் பிரச்சினையை தீர்க்க உதவும் செயலி



ஷா ஆலம் – தொகுதி மக்களுடன் அணுக்கமான உறவு பாலத்தை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் பத்து தீகா சட்டமன்ற தொகுதி சேவை மையம் செயலி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

கடந்த பிப்ரவரி மாதம் தொடக்கப்பட்ட என்41 என்ற அந்த செயலியின் வாயிலாக தொகுதி மக்கள் தங்கள் குறைகளை தெரிவிக்கவும் உதவித் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கவும் முடியும் என்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

பயனீட்டாளர்கள் இந்த செயலியை தங்கள் கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து தங்களைப் பற்றிய விபரங்களை பதிவு செய்தால் போதுமானது. அடுத்த கட்ட நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம் என்று மாநில அரசின் ஆட்சிக் குழு உறுப்பினருமான அவர் சொன்னார்.

பத்து தீகா தொகுதியில் மீண்டும் பள்ளிக்கு போகலாம் இயக்கத்தை தொடங்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தொகுதியின் நிலவரங்களை கண்காணிப்பதற்கும் பிரச்சினையை எதிர்நோக்குவோருக்கு உதவிகள் புரிவதற்கும் இந்த செயலி பெரிதும் துணை புரியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# இலவச கோவிட்-19 பரிசோதனை

## 50,000 பேர் இலக்கு மந்திரி புசார்



ஷா ஆலம் – கோவிட்-19 பெருந்தொற்றுப் பரவலை முறியடிக்கும் முயற்சியாக சிலாங்கூர் மாநிலத்தில் ஐம்பதாயிரம் பேரை இலக்காக கொண்டு இலவச கோவிட்-19 இலவச பரிசோதனை இயக்கம் தொடரப்படும் என்று மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். அடர்த்தியான மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள் மற்றும் குறைந்த வருமான பெறும் தரப்பினர் வசிக்கும் இடங்களை இலக்காக கொண்டு இந்த இலவச பரிசோதனைத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று அவர் சொன்னார். இந்த இலவச கோவிட்-19 பரிசோதனை இயக்கத்தின் வாயிலாக வசதி குறைந்தவர்களின் சுமையை குறைக்க இயலும். அது மட்டுமின்றி, நோய் பரவலை கட்டுப்படுத்தவும் முடியும் என்றார் அவர். நாம் நடத்துகின்ற ஒவ்வொரு இலவச கோவிட்-19 பரிசோதனை இயக்கத்திலும் 500 முதல் 700 பேர் வரை கலந்து கொள்கின்றனர். இன்றைய பரிசோதனை நிகழ்வில் கூட அந்நோய் கண்ட ஐவரை இச்சோதனை மூலம் அடையாளம் கண்டோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். பெட்டாலிங் ஜெயா, பிஜேஎஸ் 6இல் உள்ள சமூக மண்டபத்தில் நடைபெற்ற இலவச கோவிட்-19 பரிசோதனை இயக்கத்தை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார்.

# மார்ச் மாதத்தில் நாடாளுமன்ற கூட்டத்தொடர் இல்லை



கோலாலம்பூர் : கடந்த புதன்கிழமை, இஸ்தானா நெகாரா ஒரு அறிக்கையில் யாங் டி-பெர்த்துவான் அகோங் அல்-சுல்தான் அப்துல்லா ரியாதுதீன் அல்-முஸ்தபா பில்லா ஷா, அவசர காலங்களில் நாடாளுமன்றம் அமர முடியும் என்ற கருத்தை வெளிப்படுத்தினார்.

அதனை தொடர்ந்து, இம்மாதம் 8 ந்தேதி டேவான் ராயாட் எனப்படும் நாடாளுமன்ற மக்களவை அமர்வுக்கு சாத்தியமிருப்பதாக சில ஊடகங்கள் அறிவித்திருப்பது, நாடாளுமன்ற அசல் அமர்வுக்கான அட்டவணையில் கண்டுள்ள தேதிகளின் அடிப்படையிலாகும்.

ஆனால் அது அவசர ஆணை காலம் அமலுக்கு வருவதற்கு முன் உள்ள நாடாளுமன்ற அட்டவணை என்பதால் இனி அந்த தேதிகள் பொருந்தாது என்று டேவான் ராயாட் துணை சபாநாயகர் டத்தோ மொஹமட் ரஷீத் ஹஸ்னன் தெரிவித்தார்.

அவசர கால விதி பிரிவு 14 (1) (ஆ) மூலம் ஒரு நாடாளுமன்ற அமர்வுக்கு நாடாளுமன்றத்தை அழைக்க யாங் டி-பெர்த்துவான் அகோங்கிற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது, அதாவது மாமன்னர், பிரதமரின் ஆலோசனைப்படி அத்தகைய தேதிகளில் நாடாளுமன்றத்தை அமர்வுக்கு அழைக்கவோ, கலைக்கவோ அவசியம் எனக் கருதினால்.

அப்படியென்றால் மற்றொரு விஷயமும் செய்யப்பட வேண்டும், மக்களவை செயலாளர் மூலம் எம்.பி.களுக்கு 28 நாட்களுக்கு முன்பே அழைப்பு விட வேண்டும், என்ற விதியையும் நினைவில் கொள்ள வேண்டும்" என்று அவர் தனது டுவிட்டர் கணக்கு மூலம் விளக்கினார்.

# சிலாங்கூரிலுள்ள 66,690 முன்களப் பணியாளர்கள் முதல் கட்டமாக தடுப்பூசி பெறுவர்



ஷா ஆலம் – நேற்று தொடங்கிய முதல் கட்ட கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தில் சிலாங்கூரைச் சேர்ந்த 66,690 முன்களப் பணியாளர்களுக்கு தடுப்பூசி போடப்படும்.

தேசிய நிலையிலான முதல் கட்ட தடுப்பூசித் திட்டத்தின் மாநில அளவிலான இயக்கத்தில் சுகாதாரப் பணியாளர்கள், பாதுகாப்பு படையினர் உள்ளிட்ட முன்களப் பணியாளர்கள் மாநிலம் முழுவதும் உள்ள 44 மையங்களில்

தடுப்பூசியைப் பெற்ற மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அதிகாரிகள், டத்தோ பண்டார்கள், ஊராட்சி மன்றத் தலைவர்களும் இந்த முதல் கட்ட தடுப்பூசி பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். இந்த முதல் கட்ட தடுப்பூசிப் பணி வரும் ஏப்ரல் அல்லது மே மாதம் முடிவுக்கு வரும். அடுத்த கட்டத் தடுப்பூசி இயக்கத்தை வழி நடத்தும் பொறுப்பை மேற்கொள்ளவுள்ளதால் அவர்களுக்கு முதல் கட்டத்தில் தடுப்பூசி போடப்படும் என்றார் அவர்.

ஷா ஆலம் மருத்துவமனையில் கோவிட்-19 தடுப்பூசியை நேற்று செலுத்திக் கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பள்ளித் தவணை விரைவில் தொடங்கவுள்ளதால் ஆசிரியர்களையும் முதல் கட்ட தடுப்பூசித் திட்டத்தில் சேர்ப்பது குறித்து மாநில அரசு பரிசீலித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கணினி விண்ணப்பதாரர் வீடுகளுக்கு திடீர் வருகை

# கின்றாரா தொகுதி நடவடிக்கை



பெட்டாலிங் ஜெயா – இலவச கணினி பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்கள் வீடுகளுக்கு திடீர் வருகை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களின் குடும்ப நிலையை நேரில் கண்டறியும் நடைமுறை மேற்கொள்ளப்படவிருப்பதாக கின்றாரா சட்டமன்ற உறுப்பினர் கூறினார். மாநில அரசினால் வழங்கப்படும் இலவச கணினிகள் தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே கிடைப்பதை உறுதி செய்வதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தொகுதி உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார். கடந்த மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட செர்டேக் கின்றாரா திட்டத்தின் கீழ் இலவச கணினிகளுக்கு 500க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதைத் தொடர்ந்து இந்த அணுகுமுறையைக் கடைபிடிக்க தாங்கள் முடிவெடுத்ததாக அவர் சொன்னார். எங்கள் வசம் தற்போது 100 கணினிகள் மட்டுமே உள்ளன. ஆகவே, உண்மையிலேயே தகுதி உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் வாயிலாக பயன்பெறுவதை உறுதி செய்ய விரும்புகிறோம் என்றார் அவர்.

கணினிக்கான விண்ணப்பம் கிடைத்தவுடன் எங்கள் தொகுதி சேவை மையத்தில் உள்ள பணியாளர்கள் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரரின் வீட்டிற்கு திடீர் வருகை புரிந்து நிலவரங்களை நேரில் கண்டறிந்து இலவச கணினி பெறுவதற்கு தகுதி உள்ளவர்தானா? என்பதை தீர்மானிப்பர் என்று அவர் மேலும் தெரிவித்தார். கின்றாரா தொகுதியிலுள்ள சேவை மையத்தில் 20 மாணவர்களுக்கு இலவச கணினிகளை வழங்கியப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

# மார்ச் முதல் தேதி வரை சிலாங்கூரில் 700 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது




ஷா ஆலம் – இம்மாதம் முதல் தேதி வரை சிலாங்கூர் மாநிலத்தைச் சேர்ந்த 700 பேருக்கு கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

மாநிலத்தில் கோவிட்-19 நோய்ப் பரவலைத் தடுப்பதில் இந்த தடுப்பூசி இயக்கம் பெரிதும் துணை புரியும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் சொன்னார்.

நாம் நோய்த் தொற்றிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். கடந்த மாதம் 25ஆம் தேதி தடுப்பூசி செலுத்திக் கொண்டதிலிருந்து நானும் சக ஆட்சிக்குழு உறுப்பினர்களும் தீவிரமாக செயலாற்றி வருகிறோம் என்றார் அவர்.

அந்த தடுப்பூசி மீதான நம்பிக்கையை மீண்டும் வெளிப்படுத்திய மந்திரி புசார், அந்த தடுப்பூசி பயன்படுத்துவதற்கு பாதுகாப்பானது என்றார்.

சிலாங்கூர் மாநிலம் வரும் செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் சொந்தமாக தடுப்பூசியை கொள்முதல் செய்தப் பின்னர் தடுப்பூசித் திட்டம் தீவிரமாக மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்.

இதனிடையே, முதல் கட்டத் தடுப்பூசி இயக்கத்தில் மூன்று பிரிவுகளைச் சேர்ந்த முன்களப் பணியாளர்கள் உள்பட 68,677 பேர் தடுப்பூசிகளைப் பெறுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

மருத்துவமனைகள், மாவட்ட சுகாதார மையங்கள் மற்றும் சமூக கிளினிக்குகளில் பணிபுரியும் 14,357 பேருக்கு முதல் கட்டமாக தடுப்பூசி போடப்படும். இரண்டாம் கட்டமாக கிளினிக்குகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளைச் சேர்ந்த 17,169 பேரும் இறுதியாக காவல் துறை, தீயணைப்புத் துறை போன்ற மருத்துவத் துறை சாராத முன்களப் பணியாளர்களும் இந்த தடுப்பூசிகளைப் பெறுவர்.

சிலாங்கூர் மாநிலம் 78,000 பைசர்-பயோஎன்டெக் தடுப்பூசிகளை பெற்றுள்ளது. அந்த தடுப்பூசிகள் தேவையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டத் தரப்பினருக்கு கட்டங் கட்டமாக செலுத்தப்படும்.

# மக்கள் நம்பிக்கையுடன்
## தடுப்பூசித் திட்டத்தில் பங்கு கொள்வர்
## டாக்டர் சித்தி மரியா எதிர்பார்ப்பு



ஷா ஆலம் — சிலாங்கூரில் அதிகாரப்பூர்வமாக தொடங்கியுள்ள கோவிட்-19 தடுப்பூசி இயக்கம், தடுப்பூசியைச் செலுத்திக் கொள்வதற்குரிய நம்பிக்கையை பொது மக்களுக்கு ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடு முழுவதும் பரவியுள்ள கோவிட்-19 சம்பவங்களின் எண்ணிக்கையில் 33 விழுக்காடு சிலாங்கூரில் பதிவாகியுள்ளதால் அந்நோய்க்கு எதிராக தடுப்பூசியைப் பெறுவது மிக முக்கியமானதாகும் என்று சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.

இந்த தடுப்பூசி இயக்கத்தை நாங்கள் பெரும் நம்பிக்கையுடன் வரவேற்கிறோம். மக்களின் சுகாதாரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய மாநில சுகாதார இலாகாவுடன் இணைந்து பாடுபடுவோம் என்றார் அவர்.

பொதுமக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இந்த தடுப்பூசி இயக்கத்தில் பங்கு கொள்வர் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். நேற்று இங்குள்ள ஷா ஆலம் மருத்துவமனையில் கோவிட்-19 தடுப்பூசியை செலுத்திக் கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

கோவிட்-19 தடுப்பூசி இயக்கம் தொடங்கப்பட்டுவிட்ட போதிலும் பொதுமக்கள் தொடர்ந்து எஸ்.ஓ.பி. நடைமுறைகளை பின்பற்றி வர வேண்டும் என்பதோடு புதிய இயல்பில் செயல்படுவதற்கும் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

# மத்திய அரசிடமிருந்து 78,000
## தடுப்பூசிகளை சிலாங்கூர் பெற்றது

ஷா ஆலம் – மத்திய அரசிடமிருந்து 78,000 சொட்டு பைசர்-பயோன்டெக் தடுப்பூசிகளை சிலாங்கூர் பெற்றுள்ளது. இந்த தடுப்பூசிகளைச் செலுத்துவதில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட அல்லது முக்கியத்துவம் வாய்ந்த தரப்பினருக்கு இந்த தடுப்பூசிகள் கட்டங் கட்டமாக பகிர்ந்தளிக்கப்படும் என்று சுகாகாரத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.

மாநிலத்தில் முன்களப் பணியாளர்களின் எண்ணிக்கை மட்டும் 40,000கும் அதிகமாக உள்ளதால் இந்த தடுப்பூசித் திட்டத்தில் யாருக்கு முக்கியத்துவம் அளிப்பது என்பது தொடர்பில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இந்த தடுப்பூசித் திட்டம் நியாயமான முறையில் மேற்கொள்ளப்படும் எனக்கூறிய அவர், இவ்விவகாரத்தில் பொதுமக்கள் தங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதோடு தங்களுக்கான தருணம் வரும்வரை காத்திருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நேற்று முன்தினம், 321,390 பைசர்-பயோன்டெக் கோவிட் தடுப்பூசிகள் பெல்ஜியம் நாட்டிலிருந்து கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையம் வந்தடைந்தன.

இந்த தடுப்பூசித் திட்டத்தில் முன்களப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அவர்களைத் தொடர்ந்து மூத்த குடிமக்கள், நோயாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் 18 வயதுக்கும் மேற்பட்டவர்கள் வரிசைக் கிரமமாக தடுப்பூசிகளைப் பெறுவர்.

பிரதமர் டான் ஸ்ரீ மொகிடின் யாசின் நாட்டின் முதல் நபராக கோவிட்-19 தடுப்பூசியைப் பெறுவார். அவரைத் தொடர்ந்து சுகாதார அமைச்சின் தலைமைச் செயலாளர் டான்ஸ்ரீ டாக்டர் நோர் ஹிஷாம் அப்துல்லாவுக்கு அந்த ஊசி செலுத்தப்படும்.

# சிலாங்கூரிலுள்ள 6 மருத்துவமனைகள் தடுப்பூசி
## சேமிப்பு மையங்களாகச் செயல்படும்



ஷா ஆலம் — கோவிட்-19 தடுப்பூசி சேமிப்பு மையங்களாக சிலாங்கூர் மாநிலத்திலுள்ள ஆறு மருத்துவமனைகள் செயல்படும். தடுப்பூசி இயக்கத்திற்காக தேர்ந்தெடுக்கப்படும் சுகாதார மையங்களுக்கு இங்கிருந்து தடுப்பூசிகள் பகிர்ந்தளிக்கப்படும்.

கிள்ளான், துங்கு அம்புவான் ரஹிமா மருத்துவமனை, செர்டாங் மருத்துவமனை, செலாயாங் மருத்துவமனை, சுங்கை பூலோ மருத்துவமனை, அம்பாங் மருத்துவமனை மற்றும் தஞ்சோங் காராங் மருத்துவமனை ஆகியவையே அந்த ஆறு மருத்துவமனைகளாகும்.

தடுப்பூசிகள் பாதுகாப்பான நிலையில் உள்ளதை உறுதி செய்வதற்கு ஏதுவாக மின்சார விநியோகம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட்டப் பின்னர் அந்த ஆறு மருத்துவமனைகளும் இந்நோக்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக சிலாங்கூர் மாநில சுகாதாரத்துறை இயக்குநர் டத்தோ டாக்டர் ஷஹாரி ஙகாடிமான் கூறினார்.

மின் விநியோகம் தடைபடும் பட்சத்தில் தொடர்ச்சியான மின் சக்தியைப் பெறும் வகையில் தானியங்கி விசையுடன் கூடிய மின் உற்பத்தி இயந்திரம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 56 சுகாதார கிளினிக்குகளும் 14 மருத்துவமனைகளும் கோவிட்-19 தடுப்பூசி செலுத்தும் மையங்களாக செயல்படும் என்று துணை சுகாதார அமைச்சர் 1 டத்தோ நோர் அஸ்மி கசாலி கூறினார்.

# சிலாங்கூரில் மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக
## அதிகப்பட்ச முதலீட்டுப் பதிவு



ஷா ஆலம் — சிலாங்கூர் மாநிலம் கடந்த மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக அதிகப்பட்ச முதலீடுகளைப் பதிவு செய்துள்ளது. இந்த முதலீடுகளின் மதிப்பு 3,870 கோடி வெள்ளியாகும். கடந்த 27 ஆண்டுகளில் பதிவான அதிகப்பட்ச எண்ணிக்கை இது என்பது குறிப்பிடத்தக்கது.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக பொருளாதாரத்தில் நிச்சயமற்ற சூழல் நிலவிய போதிலும் உற்பத்தித் துறை அதிகப்பட்சமாக 1,840 கோடி வெள்ளி வருமானத்தைப் பதிவு செய்ததாக முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார். மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக அதிக முதலீடுகளை உற்பத்தித் துறை பதிவு செய்துள்ளது. கடந்த 27 ஆண்டுகளில் இதுவே மிக அதிக எண்ணிக்கையிலான முதலீடாகும் என்றார் அவர். சிலாங்கூருக்கு அடுத்து 2,100 கோடி வெள்ளி முதலீட்டுடன் சபா இரண்டாவது இடத்திலும் 1,960 கோடி வெள்ளி முதலீட்டுடன் சரவா மூன்றாவது இடத்திலும் உள்ளதை மிடா எனப்படும் மலேசிய முதலீட்டு மேம்பாட்டு வாரியத்தின் அறிக்கை காட்டுகிறது என்று அவர் குறிப்பிட்டார். கோலாலம்பூர் 1,710 கோடி வெள்ளி முதலீட்டையும் பினாங்கு 1,600 கோடி வெள்ளி முதலீட்டையும் ஈர்த்துள்ளன. கடந்த 2019ஆம் ஆண்டில் 4,780 கோடி வெள்ளி முதலீட்டை பதிவு செய்த சிலாங்கூர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23.7 விழுக்காட்டு பங்களிப்பை வழங்கியது.

# 2020ஆம் ஆண்டிற்கான லாபஈவு 5.2 விழுக்காடு- இ.பி.எ.ஃ.ப். அறிவிப்பு

கோலாலம்பூர் – கடந்த 2020ஆம் ஆண்டில் நடவடிக்கை மற்றும் பொருளாதார ரீதியாக வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ள ஊழியர் சேம நிதி வாரியம் (இ.பி.எஃப்.) மரபு ரீதியான சேமிப்புக்கு 5.2 விழுக்காட்டு லாப ஈவை அறிவித்துள்ளது. இதன் வழி அந்த வாரியம் 4,288 கோடி வெள்ளியை தனது உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கும்.

ஷரியா சேமிப்புக்கு 4.9 விழுக்காட்டு லாபஈவை அறிவித்துள்ள அந்த ஓய்வூதிய நிதி வாரியம் இந்த லாபஈவு மொத்தம் 476 கோடி வெள்ளியை உள்ளடக்கியிருக்கும் எனக் கூறியது.

உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் 2020ஆம் ஆண்டிற்கான மொத்த லாப ஈவுத் தொகையின் மதிப்பு 4,764 கோடி வெள்ளியாகும் என அறிக்கை ஒன்றில் இ.பி.எஃப் தெரிவித்தது.




கடந்த ஐந்து ஆண்டுகளாக வழங்கப்பட்ட லாப ஈவுத் தொகையின் சராசரி அளவைப் பொறுத்த வரை மரபுரீதியான சேமிப்பிற்கான லாபஈவு 4.62 விழுக்காடாகவும் ஷரியா சேமிப்பிற்கான லாபஈவு 4.32 விழுக்காடாகவும் இருந்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளாக 2.00 விழுக்காட்டிற்கும் குறையாத லாபு ஈவை வழங்கியதன் வழி நிர்ணயிக்கப்பட்ட வியூக இலக்கை இ.பி.எஃப். கடந்துவிட்டது என அந்த அறிக்கை மேலும் கூறியது.

கோவிட்-19 பரவல் ஏற்பட்ட எதிர்பாராத சூழல் மற்றும் பொருளாதாரம், சுகாதாரம் ஆகிய இரட்டை நெருக்கடிகளை உலகம் எதிர்நோக்கிய விந்தையான சூழ்லையிலும் கடந்த 2020ஆம் ஆண்டில் இ.பி.எஃப். சிறப்பான அடைவு நிலையைப் பதிவு செய்தது என்றும் அது குறிப்பிட்டது.

# நிர்ணயித்த தேதியில் தடுப்பூசி பெறத்தவறியவர்கள் மீது நடவடிக்கை நோர் ஹிஷாம் எச்சரிக்கை



கோலாலம்பூர் – கோவிட்-19 தடுப்பூசியைப் பெறுவதற்கு முன்கூட்டியே தேதி நிர்ணயித்தவர்கள் நியாயமான காரணங்கள் இன்றி குறிப்பிட்ட தேதியில் வராத பட்சத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சின் தலைமைச் செயலாளர் டான் ஸ்ரீ டாக்டர் நோர் ஹிஷாம் அப்துல்லா எச்சரித்துள்ளார்.

கோவிட்-19 தடுப்பூசிகள் யாருக்கும் பயனின்றி விரயமாவதைத் தடுக்கும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் சொன்னார்.

திரவமயமாக்கப்பட்ட பைசர்-பயோஎன்டெக் தடுப்பூசியின் ஆயுள் காலம் ஆறு மணி நேரம் மட்டும்தான் என்பதால் அதனை அடுத்த நாள் பயன்பாட்டிற்காக சேமித்து வைக்க முடியாது என்று அவர் சொன்னார்.

நாம் முழு தயார் நிலையில் இருக்கும் போது, தடுப்பூசியைப் பெற வேண்டியவர் வராவிட்டால் பொருள் வளமும் மனித வளமும் வீணாகி விடும் என்றார் அவர்.

வெளிநாடுகளில் தடுப்பூசி பெறுவதற்கான வரிசையை முந்திச் செல்வோருக்கு தண்டனை விதிக்கப்படுவதைப் போல் தடுப்பூசியைப் பெற வரத்தவறியவர்கள் மீதும் நாம் நடவடிக்கை எடுக்க முடியும். எனினும், எத்தகைய நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து நாங்கள் இன்னும் தீர்மானிக்கவில்லை என்று அவர் மேலும் சொன்னார்.

தடுப்பூசியைச் செலுத்திக் கொள்வதற்கு குறிப்பாக இரண்டாவது டோஸ் பெறுவதற்கு வர முடியாதவர்கள் குறைந்தது மூன்று தினங்களுக்கு முன்னரே தங்களிடம் தெரிவித்தால் மட்டுமே அவர்களுக்கான புதிய தேதியை நிர்ணயிப்பதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடைசி நேரத்தில் வருகையை ரத்து செய்தால் மாற்று வழியை ஆராய வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். காரணம், அந்த தடுப்பூசியை வெறுமனே வீசிவிட முடியாது. ஆகவே, காத்திருப்போர் பட்டியிலில் உள்ளவர்களுக்கு அதனை பயன்படுத்தும் சாத்தியம் உள்ளது. தடுப்பூசியை இன்னும் பெறாத முன்களப் பணியாளர்களுக்கு குறிப்பாக மருத்துவப் பணியாளர்களுக்கு அந்த தடுப்பூசி செலுத்தப்படும் என்றார் அவர்.

# ‘நாடி‘ கடனுதவித் திட்டத்திற்கு 419 பேர் விண்ணப்பம்




ஷா ஆலம் – இம்மாதம் 22ஆம் தேதி வரை ஸ்கிம் நியாகா டாருள் ஏசான் (நாடி) கடனுதவித் திட்டத்திற்கு 419 விண்ணப்பங்களை ஹிஜ்ரா சிலாங்கூர் பெற்றுள்ளது. சுமார் 90,000 வெள்ளி மதிப்பிலான 18 விண்ணப்பங்களுக்கு இதுவரை அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக சிலாங்கூர் பொருளாதார திட்டமிடல் பிரிவு, கித்தா சிலாங்கூர் தொகுப்பின் 20 திட்டங்களுக்கான மேம்பாட்டு அறிக்கையில் கூறியுள்ளது.

எஞ்சியுள்ள விண்ணப்பங்கள் ஹிஜ்ரா சிலாங்கூர் கிளை அலுவலகங்களால் பரிசீலிக்கப்பட்டு வருவதாக அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது. மொத்தம் 1,350 மீனவர்கள் வரும் மார்ச் மாத தொடக்கத்தில் பெட்ரோலுக்கான பற்றுச் சீட்டைப் பெறுவர் என்றும் இந்நோக்கத்திற்காக 405,000 வெள்ளி செலவிடப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மேம்பாட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர விபரங்கள் வருமாறு-

– சுமார் 256,494 வெள்ளி செலவில் 758 பேருக்கு இலவச கோவிட்-19 பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

– நோய்த் தாக்கம் குறைவாக உள்ள 6,909 கோவிட்-19 நோயாளிகளை செர்டாங்கில் உள்ள சிகிச்சை மற்றும் தனிமைப்படுத்தும் மையத்திற்கு கொண்டுச் செல்வதற்கான பயண ஏற்பாட்டை செய்தது.

– மக்கள் பரிவுத் திட்டத்தின் கீழ் 15 லட்சத்து 80 வெள்ளி 29,851 பேருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

–ஆறு லட்சத்து 31 ஆயிரத்து 800 வெள்ளி மதிப்பிலான உணவுக் கூடைகள் 6,318 டாக்சி ஓட்டுநர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. 1,601 பள்ளி பஸ் ஓட்டுநர்கள் 160,100 வெள்ளி மதிப்பிலான உணவுக் கூடைகளைப் பெற்றனர்.

–பி.பி.ஆர். குடியிருப்புகளைச் சேர்ந்த 2,363 பேர் இம்மாதம் 22ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை உணவு உதவிப் பொருள்களைப் பெற்றனர்.

# மக்களுக்கு பயன்தரும் 20 திட்டங்கள் கித்தா சிலாங்கூர் திட்டத்தின் வழி அமல்




ஷா ஆலம் - கோவிட்-19 பெருந்தொற்று பரவலால் பாதிக்கப்பட்ட மக்களின் சுமையைக் குறைக்கும் நோக்கில் பொருளுதவி, பொருளாதார உதவி மற்றும் கல்வி உதவி ரூபத்தில் 20 திட்டங்களை சிலாங்கூர் மாநில அரசு அமல்படுத்தியுள்ளது.

ஜனவரி மாதம் 20ஆம் தேதி அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தில் கடனுதவி ரத்து, உணவு உதவி, வேலை வாய்ப்பு, விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு, இலவச கல்வி உள்ளிட்ட அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

இத்திட்டங்களின் அமலாக்கம் தொடர்பான தரவுகளை ஸ்மார்ட் சிலாங்கூர் சி5ஐ ஒருங்கிணைந்த நடவடிக்கை மையம் (எஸ். எஸ். ஒ. சி.) வெளியிடும் என்று யுபென் எனப்படும் மாநில பொருளாதார திட்டமிடல் பிரிவு கடந்த ஜனவரி 17ஆம் தேதி அறிவித்திருந்தது.

கோவிட்-19 நோய்த் தொற்று காலத்தில் நடப்பு நிலவரங்களைக் கையாள்வதற்காக 75 லட்சம் வெள்ளி செலவில் எஸ். எஸ். ஒ. சி. மற்றும் சி. ஒ. இ. 2. எனப்படும் ஸ்மார்ட் சிலாங்கூர் மேம்பாட்டு மையம் ஆகியவை உருவாக்கப்பட்டன. கடந்த ஒரு மாத காலத்தில் ஆறு திட்டங்கள் முழுமையாக அமலாக்கம் கண்டுள்ளன.

77 லட்சம் வெள்ளி மதிப்பிலான கல்விக் கடன்களை ரத்து செய்தது, 16 லட்சம் வெள்ளி மதிப்பில் முன்களப் பணியாளர்களுக்கு இரு வாரங்களுக்கு உணவு உதவித் திட்டத்தை அமல் செய்தது ஆகியவையும் அதில் அடங்கும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளந்தான், திரங்கானு மற்றும் பகாங் ஆகிய மாநிலங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டபடி 20 லட்சம் வெள்ளி உதவித் தொகை கடந்த மாதம் 25ஆம் தேதி சம்பந்தப்பட்ட மாநிலங்களின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்டு விட்டது. 2,365 பி. பி. ஆர். குடியிருப்பாளர்களுக்கு ஜனவரி மாதத்திற்கான வாடகை தள்ளுபடி மற்றும் அடுத்த இரு மாதங்களுக்கு வாடகை ஒத்தி வைப்பு திட்டமும் அமல்படுத்தப்பட்டது.

இந்நோக்கத்திற்காக 11 லட்சம் வெள்ளி செலவிடப்பட்டது.

இது தவிர, 450 விவேக வாடகை திட்ட பயனாளிகளுக்கு ஜனவரி முதல் மூன்று மாதங்களுக்கு வீட்டு வாடகை ஒத்தி வைக்கும் திட்டமும் அமல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 6 லட்சத்து 30 ஆயிரத்து 50 வெள்ளியை உள்ளடக்கியிருந்தது.

கித்தா சிலாங்கூர் திட்டத்தின் வாயிலான அனைத்து உதவிகளும் மாநில அரசின் துணை நிறுவனங்கள், சமூக மையங்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் சேவை மையங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டதாக யுபென் விநியோக மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் துணை இயக்குநர் முகமது ஹஸ்ருள் புர்ஹானுடின் கூறினார்.

மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கிலான இலக்கவியல், தொழில்முனைவோர் திட்டங்கள் தொடர்ந்து அமலாக்கம் கண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில் மூன்று பொருளாதார மீட்சித் திட்டங்களை கடந்தாண்டு அமல்படுத்திய மாநில அரசு, அதன் தொடர்ச்சியாக இவ்வாண்டில் கித்தா சிலாங்கூர் திட்டத்தை அறிவித்துள்ளது.

# ஸ்மார்ட் சிலாங்கூர் இலவச பஸ் சேவையை 5.32 கோடி பேர் பயன்படுத்தினர்




ஷா ஆலம் — கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதி தொடக்கப்பட்ட ஸ்மாட் சிலாங்கூர் இலவச பஸ் சேவையை இதுவரை 5 கோடியே 32 பேர் பயன்டுத்தியுள்ளனர்.

சிலாங்கூர் மாநில அரசின் இந்த இலவச பஸ் திட்டத்திற்கு பொது மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதை இந்த எண்ணிக்கை காட்டுவதாக ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

தற்போது மாநிலம் முழுவதும் உள்ள 12 ஊராட்சி மன்றங்களில் 136 பஸ்கள் 43 தடங்களில் இலவச சேவையை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மலேசிய பிரஜைகளுக்கு இந்த ஸ்மார்ட் சிலாங்கூர் திட்டத்தின் வழி தொடர்ந்து இலவச சேவை வழங்கப்படும். எனினும், அந்நிய நாட்டினருக்கு கட்டணமாக 90 காசு வசூலிக்கப்படும். இந்த நடைமுறை இம்மாதம் 15ஆம் தேதி அமலுக்கு வருகிறது என்றார் அவர்.

இங்குள்ள மெனாரா பேங்க் சிம்பானான் நேஷனல் முனையத்தில் ஸ்மார்ட் சிலாங்கூர் இலவச பஸ் சேவையின் 'ஸ்கேன் டு ரைட்' எனும் திட்டத்தை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த பஸ் சேவையைப் பயன்படுத்தும் பொதுமக்களின் கருத்துக்களை பொறுத்தே சேவையின் தரத்தை உயர்த்துவது மற்றும் தடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் சொன்னார்.

# விவசாயிகளுக்கு இயற்கை உர விநியோகம் அதிகரிப்பு சிலாங்கூர் நடவடிக்கை



ஷா ஆலம் — சிலாங்கூர் மாநிலத்திலுள்ள விவசாயிகளுக்கான இலவச இயற்கை உர விநியோகத்தை மாநில அரசு அதிகரித்துள்ளது. கடந்தாண்டில் 200 டன்னாக இருந்த அந்த உர விநியோகம் இவ்வாண்டு 500 டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நவீனமயம் விவசாயம் மற்றும் விவசாய அடிப்படை தொழில்துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த அந்த உரத்தின் வாயிலாக மகசூல் அதிகரிப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இயற்கை உர விநியோகமும் அதிகரிக்கப்பட்டதாக அவர் சொன்னார்.

சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகம் உற்பத்தி செய்யும் இயற்கை உரத்தை தஞ்சோங் காராங்கிலுள்ள விவசாயிகளுக்கு வழங்கியிருந்தோம். இதன் மூலம் விளைச்சலும் அமோகமாக இருந்தது என்றார் அவர்.


அதே சமயம், கோழியின் கழிவிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உரம் டுரியான், அன்னாசி, மிளகாய் உள்பட அனைத்துப் பயிர்களுக்கும் ஊக்கமூட்டும் வளர்ச்சியை தருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இங்குள்ள பெக்கான் பெரேனாங் லாமா சந்தையில் 6,400 கிலோ இயற்கை உரத்தை விவசாயிகளிடம் வழங்கியப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

கோல லங்காட் வட்டாரத்தில் சிறிய மற்றும் பெரிய அளவில் விவசாயத்தில் ஈடுபட்டு வரும் நாற்பது விவசாயிகளுக்கு இந்த உரம் பகிர்ந்தளிக்கப்படுவதாக அவர் மேலும் சொன்னார்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக விவசாயிகளின் வீடுகள் அல்லது தோட்டங்களுக்கு நேரில் சென்று இந்த உரம் விநியோகிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

# தடுப்பூசி தொடர்பான கூடுதல் அம்சங்கள் மைசெஜாத்ரா செயலியில் இணைக்கப்படும்




கோலாலம்பூர் – தேசிய கோவிட்-19 தடுப்பூசி இயக்கத்தின் அமலாக்கத்திற்கேற்ப தடுப்பூசி தொடர்பான புதிய அம்சங்கள் மைசெஜாத்ரா செயலியில் விரைவில் சேர்க்கப்படும்.

தடுப்பூசிக்கான பதிவு, தடுப்பூசி செலுத்தும் நடைமுறை மற்றும் சுயகண்காணிப்பு ஆகிய அம்சங்களை அந்த செயலி உள்ளடக்கியிருக்கும் என்று சுகாதார அமைச்சின் நோய்க் கட்டுப்பாட்டு பிரிவின் முதன்மை தலைமை உதவி இயக்குநர் டாக்டர் ஏ.மகேஸ்வர ராவ் கூறினார். இந்த புதிய அம்சங்கள் வாயிலாக பயனாளர்கள் தடுப்பூசித் திட்டத்திற்கு தங்களைப் பதிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் அந்த செயலியை பயன்படுத்துவதற்கான வசதியைக் கொண்டிராத தங்கள் குடும்ப உறுப்பினர்களையும் பதிவு செய்ய முடியும் என்று அவர் சொன்னார்.

இந்த பதிவு நடவடிக்கையின் போது பயனாளர்கள் தங்கள் பெயர் மற்றும் அடையாளக் கார்டு எண்களை உறுதிப்படுத்த வேண்டும் என்பதோடு சில கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும். இதன் பிறகு தடுப்பூசியைப் பெறுவதற்கான தேதி குறித்த அறிவிப்பை அவர்கள் பெறுவர் என்றார் அவர்.

தடுப்பூசி தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு ஏதுவாக பயனாளர்கள் இந்த செயலியில் உள்ள அறிவிப்பு விசையை ஆன் செய்திருக்க வேண்டும் என்றும் அவர் நினைவுறுத்தினார். ஆர்.டி.எம். மற்றும் பெர்னாமா வாயிலாக கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான விளக்கமளிப்பை வழங்கிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தடுப்பூசி நடைமுறை தொடர்பான தகவல்கள் குறிப்பாக, தடுப்பூசி செலுத்தும் மையம் மற்றும் இலக்கவியல் வடிவிலான தடுப்பூசி சான்றிதழ் போன்றவை நாம் எந்நேரமும் பார்ப்பதற்கு ஏதுவாக அந்த செயலியில் சேமிப்பாக வைக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

# சிலாங்கூர் தடுப்பூசித் திட்டம்- நோய்த் தாக்கம் அதிகம் கொண்ட தொழிலாளர்களுக்கு முன்னுரிமை



ஷா ஆலம் – சிலாங்கூர் மாநிலத்தில் கோவிட்-19 தடுப்பூசியை முதல் கட்டமாக பெறும் தரப்பினரில் நோய்த் தாக்கம் அதிகம் கொண்ட தொழிலாளர்களும் இடம் பெறுவர் என சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.

வேலையிடங்களில் நோய்த் தொற்று அதிகமாக பரவுவதற்கு காரணமாக விளங்கும் அந்நியத் தொழிலாளர்களும் இந்த முதல் கட்டத் தடுப்பூசித் திட்டத்தில் இடம் பெறுவர் என அவர் சொன்னார்.

எனினும், அந்நியத் தொழிலாளர்களுக்கு செலுத்தப்படுவதற்கு தேவையான தடுப்பூசிகளை முதலாளிகள் மாநில அரசிடமிருந்து வாங்க வேண்டும் என்றும் அவர் நினைவுறுத்தினார்.

சிலாங்கூரில் சுமார் ஐந்து லட்சம் அந்நியத் தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களை நாம் கவனிக்காமல் போனால் நோய்த் தொற்றின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும். ஆகவே தங்கள் தொழிலாளர்களுக்குத் தேவையான தடுப்பூசிகளை முதலாளிகள் மாநில அரசிடமிருந்து வாங்க வேண்டும் என்றார் அவர்.

இங்கு நடைபெற்ற கிருமி நாசினி உபகரணங்களை விநியோகிக்கும் நிகழ்வுக்கு தலைமையேற்றப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 67 லட்சம் மக்கள் தொகையில் குறைந்த து 70 விழுக்காட்டினர் தடுப்பூசிகளை பெறுவது உறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

முன்னணி தொழில்துறை மாநிலமாக சிலாங்கூர் விளங்குவதால் இங்கு தொழிற்சாலைகளும் கட்டுமானப் பகுதிகளும் அதிகமாக காணப்படுகின்றன. இதனால், கோவிட்-19 தொற்று மையங்கள் அதிகளவில் தோன்றுகின்றன என்றார் அவர்.

# சினோவேக் கோவிட்-19 தடுப்பூசிகளை மலேசியா பெற்றது




சிப்பாங் – சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோவிக் கோவிட்-19 தடுப்பூசிகள் இன்று காலை மலேசியா வந்து சேர்ந்தது. பைசர்-பயோஎன்டெக் தடுப்பூசிகள் முதல் கட்டமாக மலேசியா வந்தடைந்த ஒரு வாரத்திற்குப் பிறகு மேலும் ஒரு வகை தடுப்பூசியை நாடு பெற்றுள்ளது.

குளிர்பதன கொள்கலனில் வைக்கப்பட்ட அந்த 200 லிட்டர் தடுப்பூசி மருந்து மலேசியன் ஏர்லைன்சின் ஏர்பஸ் 330-300 ரக விமானம் மூலம் பெய்ஜிங்கிலிருந்து இன்று காலை 9.00 மணியளவில் சிப்பாங்கிலுள்ள கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையம் வந்தது சேர்ந்தது.

சரக்கு விமானமாக மாற்றப்பட்ட அந்த பயணிகள் விமானம் அந்த தடுப்பூசியைப் பெறுவதற்காக கடந்த வெள்ளிக்கிழமை இரவு மணி 7.05க்கு இங்கிருந்து பெய்ஜிங் நோக்கிப் புறப்பட்டது.

அந்த 200 லிட்டர் திரவமய மருந்தைக் கொண்டு மூன்று லட்சம் டோஸ் தடுப்பூசிகளை உருவாக்க முடியும்.

இந்த தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்காக பாதுகாப்புக்கான முதன்மை அமைச்சர் டத்தோ ஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப், வெளியுறவு அமைச்சர் டத்தோ ஸ்ரீ ஹிஷாமுடின் துன் ஹூசேன், தேசிய கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தின் ஒருங்கிணைப்பு அமைச்சர் கைரி ஜமாலுடின், போக்குவரத்து அமைச்சர் டத்தோ ஸ்ரீ டாக்டர் வீ கா சியோங் மற்றும் மலேசியாவுக்கான சீனத் ஊயாங் யுஜிங் ஆகியோரும் விமான நிலையம் வந்திருந்தனர்.

## முன்களப் பணியாளர்களுக்கு பிறகுதான் நான் தடுப்பூசி பெறுவேன்

# சிலாங்கூர் சுல்தான் அறிவிப்பு



ஷா ஆலம் – அனைத்து முன்களப் பணியாளர்களுக்கும் கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்ட பின்னர்தான் தாம் தடுப்பூசியைப் பெறவுள்ளதாக சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் கூறியுள்ளார்.

நோய்த் தொற்றினால் பாதிக்கப்படும் அபாயம் அதிகம் உள்ளவர்களாக முன்களப் பணியாளர்கள் கருதப்படுவதால் தடுப்பூசித் திட்டத்தில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவது அவசியம் என்று அவர் சொன்னார்.

அனைத்து முன்களப் பணியாளர்களுக்கும் தடுப்பூசி போடப்பட்டப் பின்னர் அதிகாரிகள் நிர்ணயித்த எஸ்.ஓ.பி. நடைமுறைகளைப் பின்பற்றி நான் அந்த தடுப்பூசியை பெற்றுக் கொள்வேன் என அரச அலுவலகத்தின் அதிகாரப்பூர்வ முகநூலில் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சு நிர்ணயித்துள்ள அட்டவணையின்படி கோவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களை கேட்டுக் கொண்ட அவர், தடுப்பூசி எதிர்ப்பு கும்பலின் பிரசாரங்களால் ஈர்க்கப்படக் கூடாது என்றும் நினைவுறுத்தினார்.

கோவிட்-19 தடுப்பூசிக்கு எதிரான நடவடிக்கைகள் பொறுப்பற்றவை என்பதோடு மார்க்க நெறிக்கும் முரணானவை என்று முன்னதாக சுல்தான் கூறியிருந்தார்.

இத்தகைய செயல்கள் சம்பந்தப்பட்டத் தரப்பினரை மட்டுமின்றி ஒட்டுமொத்த சமுதாயத்தையே பாதிப்புக்குள்ளாக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

# கோவிட்-19க்கு எதிரான போராட்டம்

**சுமார் 67 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட சிலாங்கூர் கோவிட்-19 நோய்ப் பரவல் கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதி செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.**

**முதலாவது மற்றும் இரண்டாவது நோய்த் தொற்று அலைகளை வெற்றிகரமாக கடந்தப் பின்னர் பெரிய சவால் மிகுந்த மூன்றாவது அலையை கட்டுப்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.**

**அந்நோய்த் தொற்று பரவாமல் தடுப்பதற்காக மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் உதவித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது.**

**கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் அந்நோயிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கும் மாநில அரசு எடுத்துள்ள முயற்சிகள் மற்றும் திட்டங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன-**



## பொய்ஸ்- மூன்றாவது அலையைத் தடுக்க புதிய நடவடிக்கை

அதிகமான அந்நியத் தொழிலாளர்கள் உள்பட அடர்த்தியான மக்கள் தொகையைக் கொண்ட சிலாங்கூர் மாநிலம் அடிக்கடி அதிக எண்ணிக்கையிலான கோவிட்-19 சம்பவங்களை பதிவு செய்து வருகிறது. இருந்த போதிலும், நோய்த் தொற்றைத் தடுப்பதற்கு பல்வேறு திட்டங்கள் முறையான வழிகளில் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இது குறித்து சுகாதாரத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் தெளிவாக விளக்குகிறார். கோவிட்-19 நோய்த் தொற்றைத் தடுப்பதற்கான நீண்ட கால மற்றும் குறுகிய கால வியூகங்கள் யாவை? கோவிட்-19 நோய் அதிகம் பரவக்கூடிய சாத்தியம் அதிகம் உள்ள இடங்களை அடையாளம் காண்பது குறுகிய கால நடவடிக்கையாகும். கோவிட்-19 பெருந்தொற்று சாத்தியம் அதிகம் உள்ள பகுதிகளை இடர் வரைபடமாக தரக்கூடிய செயற்கை உளவு வழிமுறை மூலம் தகவல்களைப் பெறுகிறோம் இதன் மூலம் நோய்த் தொற்று கொண்டவர்களை தனிமைப்படுத்துதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டு நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த முடிகிறது. நீண்ட கால அடிப்படையிலான திட்டங்களை எடுத்துக் கொண்டால், பொய்ஸ் எனப்படும் நோய்த் தொற்று அதிகம் உள்ள பகுதிகளை அடையாளம் கண்டு தடுப்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்வதன் மூலம் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை மாநில அரசு தீவிரப்படுத்துகிறது. இந்நோக்கத்திற்காக பொருளாதார மீட்சி நடவடிக்கைகள் மீதும் கவனம் செலுத்தப்படுகிறது. மாநில மக்களுக்கும் பொருளாதாரத்திற்கும் நேர்மறையான விளைவுகள் ஏற்படுவதற்கும் வாய்ப்பு கிட்டுகிறது. நமது பிரதான நோக்கங்களில் முக்கியமானது கோவிட்-19 தடுப்பூசி இயக்கமாகும். மாநிலத்தில் தொழில்துறை சார்ந்தவர்களுக்கும் பி40 குறைந்த வருமானம் பெறுவோருக்கும் தடுப்பூசி கிடைப்பதை உறுதி செய்வதில் மாநில அரசு முக்கியத்துவம் தருகிறது. தேசிய தடுப்பூசி இயக்கத்தின் நோக்கத்திற்கேற்ப இது அமைகிறது. சிலாங்கூர் முதலாவது மற்றும் இரண்டாவது கோவிட்-19 அலையை வெற்றிகரமாக கட்டுப்படுத்தி விட்டது. ஆனால் மூன்றாவது அலையை அது கட்டுப்படுத்த தவறிவிட்டதாக கூறப்படுகிறது. எதனால் இது நேர்ந்தது? சிலாங்கூரில் பதிவு செய்யப்பட்ட நோயின் எண்ணிக்கை குறித்து ஊடகங்களும் சுகாதார அமைச்சும் வெளியிடும் தகவல்கள் மீது பொதுமக்கள் மத்தியில் சரியான புரிதலைக் கொண்டிராததை உணர முடிகிறது.


















### சிலாங்கூர் மாநில கோவிட்-19 தடுப்பு பணிக்குழு (எஸ்.டி.எஃப்.சி.)

- கடந்த 202 மார்ச் 10ஆம் தேதி தொடங்கப்பட்டது
- மக்களுக்கு கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதலை வழங்கும் பொறுப்பை வகிக்கிறது
- நான்கு சுகாதார நிபுணர்களும் சிலாங்கூர் சுகாதாரத் துறை பிரதிநிதிகளும் இத்திட்டத்திற்கு துணை புரிகின்றனர்

### பாதுகாப்பான நுழைவு செயலி (செலங்கா)

- நோய்த் தொற்று கொண்டவர்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளவர்களை அடையாளம் நோக்கில் நாட்டில் முதன் முறையாக இந்த செயலியை சிலாங்கூர் கடந்த 4-5-2020இல் தொடக்கியது
- நோய்த் தொற்று அபாயம் உள்ள மையங்களை அடையாளம் காணுதல்
- நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களை அடையாளம் காண்பதை எளிதாக்குவது
- வணிக மையங்களுக்கு வருவோரின் வருகைப் பதிவை சிலாங்கூர் அரசு கண்காணிக்கும். நோய்த் தொற்று உள்ளவர்கள் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் சுகாதார அதிகாரிகளால் நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும்.
- தடுப்பூசிக்கான பதிவு உள்ளிட்ட அம்சங்கள் இச்செயலியில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

### தடுப்பூசி

- இடைத்தரகர் உதவியின்றி 30 லட்சம் முதல் 40 லட்சம் தடுப்பூசிகளை வாங்குவது
- விலை, ஆக்கத்தன்மை மற்றும் சூழலுக்கு ஏற்ற தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் தடுப்பூசிகள் கொள்முதல் செய்யப்படும்
- சிலாங்கூர் மாநில மக்கள், அந்நியத் தொழிலாளர்கள் மற்றும் இங்கு வசிக்கும் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த தடுப்பூசி செலுத்தப்படும்

### சமூக பரிசோதனை இயக்கம்

- வெ. 13 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீட்டில் கடந்த 1 ஏப்ரல் 2020இல் இத்திட்டம் தொடக்கப்பட்டது
- அறிகுறி எதுவும் தென்படாத கோவிட்-19 நோயாளிகளை அடையாளம் காண்பது
- பராமரிப்பு இல்லங்கள் மற்றும் டயாலிசிஸ் மையங்களில் உள்ள நோய்த் தொற்று தாக்கம் அதிகமுள்ள மூத்த குடிமக்கள், குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினர் மற்றும் சிலாங்கூர் மாநில உயர்கல்விக்கூட மாணவர்களை இலக்காக கொண்டு இத்திட்டம் வரையப்பட்டது
- 2021இல் 50,000 பேருக்கு இலவச கோவிட்-19 பரிசோதனைகளை மேற்கொள்ள இலக்கு
- 2021 ஜனவரி முதல் 10,000 பேருக்கு இலவச கோவிட்-19 சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கித்தா சிலாங்கூர் திட்டத்தின் வழி இந்நோக்கத்திற்கு மேலும் 60 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது
- 2020 ஏப்ரல் 18 மற்றும் 19ஆம் தேதிகளில் ஷா ஆலம், செக்சன் 7இல் வாகனங்களில் இருந்தவாறு பரிசோதனை செய்யும் இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

### சபாவிலிருந்து நாடு திரும்பியவர்களுக்கான பரிசோதனை

- 2020 செப்டம்பர் 20 முதல 26ஆம் தேதிக்குள் சபா சென்று வந்தவர்களுக்கான சோதனை
- மாநிலம் முழுவதும் உள்ள 16 செல்கேர் கிளினிக்குகளில் கடந்த 2020 அக்டோபர் 4 முதல் 10ஆம் தேதி வரை இச்சோதனை மேற்கொள்ளப்பட்டது.
- சபா சென்று வந்ததற்கான ஆதாரமாக விமான டிக்கெட்டை காட்டும்படி சம்பந்தப்பட்டவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
- இதர ஆதாரங்களாக அடையாளக் கார்டு, மின்சார மற்றும் நீர் கட்டண பில்களையும் சமர்பிக்க வலியுறுத்தப்பட்டது.

### கோவிட்-19 மதிப்பீட்டு மையம் (சி.ஏ.சி.)

- மூன்று விளையாட்டரங்குகள், நான்கு ஊராட்சி மன்ற மண்டபங்கள், 12 சுகாதார கிளினிக்குகள் உள்ளிட்ட 19 மையங்கள் சி.ஏ.சி. மையங்களாகச் செயல்பட்டன.
- கிள்ளான், உலு லங்காட், பெட்டாலிங் மற்றும் சிப்பாங்கில் இந்த மையங்களை விரிவாக்க திட்டம்
- வீடுகளில் தனிமைப்படுத்தக்கூடிய நோயாளிகளை அடையாளம் காண்பது
- செர்டாங்கில் உள்ள சிகிச்சை மற்றும் தனிமைப்படுத்துதல் மையத்திற்கு (பி.கே.ஆர்.சி.) கொண்டுச் செல்ல வேண்டிய முதல் மற்றும் இரண்டாம் பிரிவு நோயாளிகளை அடையாளம் காணுதல்
- வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் நோயாளிகளின் நிலைமையை மதிப்பீடு செய்தல்

### நோய்ப் பரவல் அபாயம் அதிகமுள்ள பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (பொய்ஸ்)

- புதிய தொற்று மையத்தை உருவாக்கும் சாத்தியமுள்ள அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் வேலையிடங்களில் சோதனை மேற்கொள்வது
- சிலாங்கூர் சுகாதார இலாகா, செல்கேட் கார்ப்ரேஷன் சென்.பெர்ஹாட், ஊராட்சி மன்றங்கள், மலேசிய தொழிற்சாலை உரிமையாளர்கள் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுதல்
- கோவிட்- நோய்ச் சம்பவங்களை மறைப்போர் மற்றும் நெருக்கமான தொடர்பில் உள்ளவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்காதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது
- நோய்த் தொற்று அதிகமுள்ள பகுதிகளை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக முதலாளிகள் செயல்குழுவை அமைப்பது
- அவசரகால திட்டங்களை வரைவது, வெளித் தொடர்பு குறைக்கப்படுவதை உறுதி செய்வது, சீரான செயலாக்க நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படுவதை உறுதி செய்வது ஆகிய பணிகளை இந்த செயல்குழு மேற்கொள்ளும்
- நோய்ப் பரவல் முன்னெச்சரிக்கை முறையாக விளங்கும் செலங்கா நோய்த் தொற்று இதர பகுதிகளுக்கு பரவுவதை தடுக்கும்

### முன்களப் பணியாளர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டம்

- கடந்த 2020இல் சிலாங்கூர் மாநிலத்திலுள்ள அனைத்து 6,000 முன்களப் பணியாளர்களுக்கும் ஒரு முறை அடிப்படையில் 200 வெள்ளி வழங்கப்பட்டது
- இந்நோக்கத்திற்காக 12 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டது
- பணியின் போது உணவு உதவி வழங்கப்பட்டது

### முன்களப் பணியாளர்கள் பிள்ளைகள் பராமரிப்புத் திட்டம்

- முன்களப் பணியாளர்கள் பிள்ளைகள் பராமரிப்புத் திட்டம் எம்.பி.ஐ. எனப்படும் மந்திரி புசார் கழகத்தின் கீழ் 700,000 வெள்ளி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்டது.
- சக்னா அனாக் மலேசியா சங்கத்தின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது
- ஒன்பது மருத்துவமனைள், செர்டாங்கில் உள்ள பி.கே.ஆர்.சி. மையம் உள்பட 12 இடங்களில் இந்த மையம் செயல்படுகிறது
- இவ்வாண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த இரு மாதகாலத் திட்டத்தின் வழி 500 பேர் பயன்பெறுவர்
- கடந்த 2020இல் இந்நோக்கத்திற்காக 2,500 குடும்பங்களுக்கு தலா 600 வெள்ளி வழங்கப்பட்டது

### முன்களப் பணியாளர்களுக்கு உணவு உதவித் திட்டம்

- கித்தா சிலாங்கூர் தொகுப்பில் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் 30 லட்சம் வெள்ளி ஒதுக்கீட்டில் மந்திரி புசார் கழகத்தினால் (எம்.பி.ஐ.) மேற்கொள்ளப்படுகிறது.
- இந்த உதவித் திட்டத்தித்தின் வழி மதிய மற்றும் இரவு உணவு வழங்கப்படுகிறது
- மருத்துவமனைப் பணியாளர்கள், காவல் துறையினர் மற்றும் இராணுவத்தினர் இத்திட்டத்தின் வழி பயன்பெற்றனர்.

### கோவிட்-19 நோயாளிகளுக்கான சிறப்பு உதவித் திட்டம்

- சிலாங்கூரிலுள்ள கோவிட்-19 நோயாளிகளுக்கு இத்திட்டத்தின் வழி நிதியுதவி வழங்கப்பட்டது.
- இந்நோக்கத்திற்காக 18 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டது
- நோயாளிகளுக்கு தலா 1,000 வெள்ளி வழங்கப்பட்டது

### மாணவர்களுக்கு இலவச முகக் கவசம் விநியோகம்

- பத்து லட்சம் முகக் கவசங்கள் கடந்த 2020 ஆகஸ்டு மாதம் விநியோகிக்கப்பட்டன
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இதன் மூலம் பயன்பெற்றனர்

### கோவிட்-19 நடவடிக்கை அறை

- ஸ்மார்ட் சிலாங்கூர் சி5ஐ நடவடிக்கை அறையிலிருந்து 24 மணி நேரமும் செயல்படுகிறது
- உதவி நிர்வாகத்தை திட்டமிடுவது, கூட்டரசு நிறுவனங்களுடன் இணைந்து கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் கோவிட்-19 எண்ணிக்கையை விரைந்து கண்காணிப்பது
- ஜி.பி.பி.எஸ். 3 இணைய ஒருங்கமைப்பு, மைய தொடர்பு முறை மற்றும் விவேக தரவுத் தளத்தைக் கொண்டிருப்பது

### மன ஆரோக்கியத்தைக் கையாள்வது

- இத்திட்டத்திற்கு வெ.10 லட்சம் ஒதுக்கீடு
- சமூக ஊடகங்கள் வாயிலாக மன நல வகுப்புகளை நடத்துவது
- கடந்த ஜூன் 2020இல் இந்த வகுப்பு நடத்தப்பட்டது

### ஸ்மார்ட் சிலாங்கூர் இலவச பஸ் சேவை

- கடந்த 23-2-2021 தொடங்கி ஐந்து பஸ்களை கோவிட்-19 நோயாளிகளை செர்டாங். பி.கே.ஆர்.சி. கொண்டுச் செல்லும் மற்றும் அங்கிருந்து ஏற்றி வரும் பணிக்கு பயன்படுத்துவது
- கடந்த 9-2-2021 முதல் ஷா ஆலம் அரங்கிலிருந்து நோயாளிகளை ஏற்றிச் செல்லும் பணியை மேற்கொள்வது
- சுமார் 250,000 வெள்ளி நிதி ஒதுக்கீட்டிலான இத்திட்டதின் வாயிலாக 4,300 நோயாளிகள் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது

### செலங்கா வீட்டு கண்காணிப்பு உபகரணம்

- செல்கேட் சென்.பெர்ஹாட் நிறுவனத்தின் ஒத்துழைப்பில் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் குறித்து கித்தா சிலாங்கூர் திட்டத்தில் அறிவிக்கப்பட்டது.
- சுயமாக தனிமைப்படுத்திக் கொண்டவர்களுக்கு உதவும் நோக்கில் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது
- 24 மணிநேர தொலைபேசி சேவை மையம்

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 14/ 8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

selangor kini mar 2021.indd 8
04-Mar-21 4:40:50 PM

# தரிசு நிலங்களை வளப்படுத்தி வருமானம் ஈட்டுவீர்- கிராமப்புற மக்களுக்கு வேண்டுகோள்

கோல லங்காட் – தரிசாக கிடக்கும் தங்கள் நிலங்களை வளப்படுத்துவதன் மூலம் வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்புகளை கண்டறியும்படி கிராமப்புற மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

காலியாக இருக்கும் நிலங்களில் காய்கறிகள் மற்றும் பழவகைகளை பயிரிடுவதன் மூலம் வருமானத்தை பெருக்கிக் கொள்வதற்குரிய வாய்ப்பு கிராமப்புற மக்களுக்கு கிட்டும் என்று புறநகர் மேம்பாடு மற்றும் பாரம்பரிய கிராம மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் புர்ஹான் அமான் ஷா கூறினார்.

கிராமங்களில் பொதுவாக பெரிய அளவில் காலி நிலங்கள் காணப்படும். முறையாக பராமரிக்கப்படாத காரணத்தால் அந்நிலங்கள் புதர்கள் நிரம்பி காரணப்படும். தரிசாக கிடக்கும் இந்நிலங்களிலிருந்து எந்த வருமானமும் கிடைக்காது.

இந்நிலங்களை கிராம மக்கள் விவசாய நோக்கத்திற்கு பயன்படுத்துவதன் மூலம் குடும்ப மற்றும் கிராமப் பொருளாதாரம் மேம்படுவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்த முடியும் என்றார் அவர்.

இங்குள்ள சிஜங்காங் பத்து 8 கிராமத்தில் நடைபெற்ற கிராமத்தை நோக்கி நாம் எனும் நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

### நோய்த் தொற்றை பரப்புவோர், மீண்டும் குற்றம் புரிவோருக்கு

# வெ.10,000 அபராதம்- ஐ.ஜிபி. விளக்கம்



ஜெலி – நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை தொடர்ந்து மீறுவோர் மற்றும் கோவிட்-19 நோய்த் தொற்று பரவலுக்கு காரணமாக இருப்பவர்களுக்கு மட்டுமே பத்தாயிரம் வெள்ளி அபராதம் விதிக்கப்படும் என்று தேசிய போலீஸ் படைத் தலைவர் டான் ஸ்ரீ அப்துல் ஹமிட் பாடோர் தெளிவுபடுத்தினார்.

அபராதத் தொகையை 1,000 வெள்ளியிலிருந்து 10,000 வெள்ளியாக உயர்த்தும் அரசாங்கத்தின் முடிவு எஸ்.ஓ.பி. எனப்படும் நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகளை மீறும் அனைவரையும் உட்படுத்தாது என்றும் அவர் சொன்னார்.

இந்த அபராதத் தொகை அதிகரிப்பினை சாதாரண மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி என நாடாளுமன்ற எதிர்க்கட்சிகளின் தலைவர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வன்மையாக சாடியிருந்ததையும், தொடர்ந்து பக்காத்தான் கட்சித் தலைவர்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் வந்தனர். பத்தாயிரம் வெள்ளி அபராதத் தொகை குறித்து பொது மக்கள் மத்தியில் அச்சம் நிழவி வந்தது. இந்த ஐயப்பாடுகளை போக்கும் வண்ணமும், தவறான புரிதல் எற்படுவதை தவிர்க்க, முகக் கவசம் அணியாதது உள்பட அனைத்து குற்றங்களுக்கும் இந்த அதிகப்பட்ச அபராத் தொகை விதிக்கப்படாது என்றார் தேசிய போலீஸ் படைத் தலைவர்.

குறிப்பிட்ட சில குற்றங்களுக்கு மட்டுமே இந்த அதிகப்பட்ச அபராதம் விதிக்கப்படும். தொடர்ந்து தவறுகளைப் புரிவோர் மற்றும் மாநில எல்லைகளைக் கடப்பது உள்ளிட்ட எஸ்.ஓ.பி. விதிமுறைகளை மீறுவதன் மூலம் நோய்த் தொற்றுப் பரவலுக்கு காரணமாக விளங்குவோர் ஆகியோர் மட்டுமே இத்தகைய கடுமையான தண்டனையை எதிர்நோக்குவர் என்றும் அவர் தெரிவித்தார் ஜெலி மாவட்ட போலீஸ் தலைமையகத்தின் புதிய கட்டிட நிர்மாணிப்பைப் பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

கோவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அமல்படுத்தப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகளை மீறுவோருக்கு பத்தாயிரம் வெள்ளி அபராதம் விதிக்க வகை செய்யும் சட்டம் வரும் மார்ச் மாதம் 11ஆம் தேதி அமலுக்கு வருவதாக கடந்த 25ஆம் தேதி அரசாங்கம் அறிவித்தது.

எஸ்.ஓ.பி. தொடர்பான குற்றங்களைப் புரியும் தனி நபர்களுக்கு பத்தாயிரம் வெள்ளி அபராதமும் நிறுவனங்கள் அல்லது கழகங்களுக்கு 50,000 வெள்ளி வரை அபராதம் விதிக்கும் வகையில் இச்சட்டம் அமல் செய்யப்படுகிறது.

# எஸ்.ஓ.பி. விதிமுறைகளை மீறுவோருக்கு வெ.10,000 அபராதம்

# முடிவை மறுஆய்வு செய்ய அன்வார் வலியுறுத்து

ஷா ஆலம் – கோவிட்-19 நோய்த் தொற்றைத் தடுப்பதற்காக அமல்படுத்தப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகளை (எஸ்.ஓ.பி.) மீறுவோருக்கு பத்தாயிரம் வெள்ளி அபராதம் விதிக்கும் முடிவை மறுஆய்வு செய்யும்படி அரசாங்கம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அதிகப்பட்ச அபாராதம் மக்களுக்கு சுமையையும் அதிக சிரமத்தையும் கொடுக்கும். ஏனென்றால் இதுபோன்ற குற்றங்களுக்கு அத்தரப்பினர் மட்டுமே தண்டிக்கப்படுவார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

செல்வாக்கு உள்ளவர்கள், மேல் மட்டத்தினர் மற்றும் உயரிய அந்தஸ்து கொண்டவர்களில் பலர் எஸ்.ஓ.பி. விதிமுறைகளை மீறியது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்களுக்கு அதிகப்பட்ச அபராதம் விதிக்கப்பட்டதில்லை. அபராதம் விதிக்கப்பட்டாலும் அவர்களால் பேரம் பேச முடிகிறது என்றார் அவர்.

அரசாங்கம் ஏன் தன்மூப்பாகவும் மக்களை சிறிதும் பொருட்படுத்தாமலும் இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சுகாதாரத்திற்கு நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதால் எஸ்.ஓ.பி. விதிமீறலை நான் இலகுவாக எடுத்துக் கொள்ளவில்லை. எனினும், இவ்விவகாரத்தில் கடைபிடிக்கும் அணுமுறையைத்தான் என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை என்று அவர் சொன்னார்.

அபராதத் தொகையை அதிகரிப்பதற்கு பதிலாக மக்கள் மத்தியில் காணப்படும் வேலையின்மை, வறுமை, குடியிருப்புப் பிரச்னை ஆகியவற்றுக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# முறையான திட்டமிடல் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து கவலையற்ற அரசு

கோலாலம்பூர் – மாணவர்களின் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்ய ஐந்து பரிந்துரைகளை எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு முன்வைத்துள்ளது.

வரும் மார்ச் மாதம் முதல் தேதி தொடங்கி பள்ளிகள் கட்டங் கட்டமாக திறக்கப்படும் என்ற கல்வியமைச்சின் அறிவிப்பை கருத்தில் கொண்டு இந்த பரிந்துரையை தாங்கள் முன்வைப்பதாக அக்குழு கூறியது.

பள்ளிகள் வரும் மார்ச் மாதம் திறக்கப்படும் என்ற அறிவிப்பை கண்டு நாங்கள் அதிர்ச்சியடைந்தோம். அனைத்துப் பகுதிகளுக்குமான இந்த ஒட்டுமொத்த முடிவு மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பல்வேறு பிரச்னைகளை கவனத்தில் கொள்ளாமல் எடுக்கப்பட்டதாக தோன்றுகிறது.

நாடு கோவிட்-19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு ஓராண்டு ஆகிவிட்ட நிலையில் மாணவர்களின் கல்வியில் தொடர்புடைய தரப்பினரின் குறிப்பாக பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்தை கல்வியமைச்சு பெற்றிருக்க வேண்டும். ஒட்டு மொத்த நாட்டு மக்களையும் உட்படுத்திய பெரிய விவகாரங்களில் முடிவெடுப்பதில் இது போன்ற திறனற்ற போக்கு நிலவுவதை இனியும் தவிர்க்க வேண்டும் என்று அக்குழு வலியுறுத்தியது. இணையம் வாயிலாக வீட்டிலிருந்தே கல்வி கற்பதற்கு ஏதுவாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பெரும் செலவில் கணினி போன்ற உபகரணங்களை வாங்கித் தந்துள்ளனர். பள்ளிகள் திறக்கப்படும் தகவலை கல்வியமைச்சர் வெளியிடுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் நமது பிரதமர் கல்வித் தொலைக்காட்சி ஒளிபரப்பை தொடக்கி வைக்கிறார்.

இது போன்ற முரண்பட்ட அறிவிப்புகளும் நடவடிக்கைகளும் கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கூறியது. இவ்விவகாரம் தொடர்பில் இம்மாதம் 20ஆம் தேதி பக்கத்தான் கல்விக் குழு சமர்ப்பித்த பரிந்துரைகளை கல்வியமைச்சு கவனத்தில் கொள்ள வேண்டும் என அது கேட்டுக்கொண்டது.

# நகைகளை அடகு வைக்கும் போது கவனம் தேவை- போலீசார் எச்சரிக்கை



ஷா ஆலம் – நகைகளை அடகுக் கடைகளில் அடகு வைக்கும்போது மிகுந்த கவனத்துடன் செயல்படும்படி பொதுமக்களை காவல் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். நடப்புச் சூழலில் பணத்தை தேடுவதில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்னையை பயன்படுத்தி அடகுக் கடைகளும் லைசென்ஸ் இன்றி செயல்படும் சட்டவிரோத அடகுக் கடைகளும் பொதுமக்களை ஏமாற்றுவதற்குரிய வாய்ப்பு உள்ளதாக புக்கிட் அமான் வர்த்தக குற்றப்புலனாய்வுத் துறை இயக்குநர் டத்தோ ஜைனுடின் யாக்கோப் கூறினார்.

கடந்தாண்டு மார்ச் மாதம் அமலுக்கு வந்த நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை குறிப்பிட்ட சில தரப்பினருக்கு பொருளாதார ரீதியில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக பலர் தங்கள் வசமுள்ள நகைகளை அடகு வைக்கும் சூழ்நிலையும் உண்டாகிறது என்று அவர் சொன்னார்.

அத்தகைய சூழ்நிலையை எதிர்நோக்கும் பொதுமக்கள் தாங்கள் நகைகளை அடகு வைக்கும் போது சம்பந்தப்பட்ட அடகுக் கடைகள் அரசாங்கத்திடமிருந்து முறையான அனுமதியைப் பெற்றுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நகைகளை அடகு வைப்பது தொடர்பான எந்த நடவடிக்கையும் லைசென்ஸ் பெற்ற அடகு கடைகளில் நேரடியாக மேற்கொள்ள வேண்டும். இணையம் வாயிலாக நகைகளை அடகு வைப்பதை அவர்கள் முற்றாக தவிர்க்க வேண்டும் என்றும் அவர் நினைவுறுத்தினார்.

இது போன்ற மோசடிச் செயல்கள் தொடர்பில் இதுவரை தமது தரப்பு எந்த புகாரையும் பெறவில்லை எனக் கூறிய அவர், எனினும், இத்தகைய மோசடிகள் நடைபெறாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்றார். வர்த்தக குற்றங்கள் நிகழாதிருப்பதை உறுதி செய்வதில் காவல் துறையும் பொதுமக்களும் இணைந்து செயல்பட வேண்டும். அதே சமயம் பொதுமக்களும் வீண் செலவுகளைத் தவிர்த்து சிக்கனமாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

# கூட்டரசு நீதிமன்றத்தை அவமதித்ததாக சார்ல்ஸ் சந்தியாகோ மீது போலீஸ் புகாரா?



கிள்ளான் – மலேசியாகினி இணைய செய்தித்தளத்தைக் குற்றவாளி எனத் தீர்ப்பளித்து, ரிம 500,000 அபராதம் விதித்த கூட்டரசு நீதிமன்றத்தின் முடிவைப் பற்றி தான் கருத்து தெரிவித்ததை தொடர்ந்து தனக்கு எதிராக போலீஸ் புகார்கள் செய்யப் பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளது என கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினரான சார்ல்ஸ் சந்தியாகோ தெரிவித்தார். மத்திய அரசியலமைப்பின் 10 வது பிரிவின் படி, எனக்கும் சரி, இந்நாட்டின் குடிமக்கள் அனைவருக்கும் சரி, சுதந்திரமான பேச்சுரிமை மற்றும் கருத்து வெளிப்படுத்தும் உரிமை வழங்கியுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது மிக முக்கியம். ஆகையால், நான் எனது அடிப்படை உரிமையைப் பயன்படுத்துகிறேன். அப்படியானால், இத்தருணத்தில், தீர்ப்பைப் பற்றிய எனது கருத்துகளையும் கவலைகளையும் எந்தவொரு அவமதிப்பிற்கும் போலீஸ் புகார்களுக்கும் அஞ்சாமல், நான் வெளிப்படுத்த உரிமை உள்ளது என பொருள்படும். மத்திய நீதிமன்றத்தின் முடிவு ஒருமனதாக இல்லை. அதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அதே வேளையில், மத்திய நீதிமன்றத்தின் தீர்ப்பு தலைகீழாக மாற்றப் பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்வது மிக அவசியம். நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமியற்றுபவர் என்ற முறையில், இப்போது பேச வேண்டியது எனது கடமை. ஒருவர் மீது போலீஸ் புகார் செய்யப்படுவது என்பது இந்த நாட்டில் வேகமான வளர்ந்து வரும் கலாச்சாரமாகி விட்டது. அதைவிடுத்து, தற்போது மலேசியா மற்றும் அதன் மக்கள் எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சனைகளை நாம் கவனிக்க வேண்டும் என நான் பெரிதும் எதிர்பார்க்கிறேன். ஆனால் விசாரணைக்கு என்னை அழைத்தால் எனது முழு ஒத்துழைப்பையும் நான் வழங்குவேன் என்றார் சார்ல்ஸ் சந்தியாகோ.

# பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப எல்லை கடக்கலாம் போலீஸ் அனுமதி கடிதம் தேவையில்லை




கோலாலம்பூர்– பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவதற்காக மாவட்ட அல்லது மாநில எல்லைகளை கடக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள பெற்றோர்கள் காவல் துறையிடமிருந்து அனுமதி கடிதங்களைப் பெற வேண்டிய அவசியமில்லை.

இதற்கு பதிலாக பள்ளிகள் வழங்கிய சான்று கடிதங்களை அவர்கள் சாலை தடுப்புகளில் காட்டினால் போதுமானது என்று பாதுகாப்புக்கான முதன்மை அமைச்சர் டத்தோ ஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் கூறினார்.

உதாரணத்திற்கு பள்ளியின் தங்கும் விடுதிக்கு செல்வதாக இருந்தால், மாவட்ட அல்லது மாநில எல்லைகளைக் கடப்பதற்கான அனுமதிக் கடிதத்தை ஆசிரியர்கள் வழங்கலாம் என்றார் அவர்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் ஆகக்கடைசி நிலவரங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக நடத்தப்பட்ட செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரச மலேசிய போலீஸ் படையின் உயர் அதிகாரிகளுடன் இவ்விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறிய இஸ்மாயில் சப்ரி, இதன் தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து நாட்டிலுள்ள அனைத்து போலீசாருக்கும் தெரிவிக்கப்பட்டு விட்டதாகச் சொன்னார்.



# கால்நடைகளால் பொதுமக்களுக்கு இடையூறு- இரு உரிமையாளர்களுக்கு அபராதம்

கோல சிலாங்கூர் – கால்நடைகளை கட்டுப்பாடின்றி சாலைகள் மற்றும் வீடமைப்புப் பகுதிகளில் மேய விட்டதற்காக இரு கால்நடை வளர்ப்போருக்கு கோல சிலாங்கூர் மாவட்ட மன்றம் அபராதம் விதித்துள்ளது.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் இச்செயலுக்காக இங்குள்ள ராஜா அப்துல்லாவை சேர்ந்த அவ்விரு கால்நடை உரிமையாளர்களுக்கும் இம்மாதம் 9ஆம் தேதி அபராதம் விதிக்கப்பட்டது.

பெஸ்தாரி ஜெயா, ஈஜோக் மற்றும் ஜெராம் வட்டாரத்தில் தாங்கள் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது எட்டு ஆடுகளும் இரு மாடுகளும் பிடிபட்டதாக மாவட்ட மன்றம் தனது முகநூல் வாயிலாக தெரிவித்தது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆயிரம் வெள்ளி வரை அபராதம் அல்லது 12 மாதம் வரை சிறைத்தண்டனை விதிக்க வகை செய்யும் 1971ஆம் ஆண்டு மாடு-எருமை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5(1)வது பிரிவின் கீழ் இச்சம்பவம் விசாரிக்கப்பட்டு வருவதாக அது கூறியது.

பிடிபடும் கால்நடைகள் சிறப்புக் கூண்டுகளில் தடுத்து வைக்கப்படும். அங்கு வைக்கப்படும் கால்நடைகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை அதன் உரிமையாளர்கள் செலுத்த வேண்டும். அதன் பிறகே அவற்றை திரும்ப பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கண்ட சட்டத்தின்படி மேற்கொள்ள இயலும் என்று அந்த முகநூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டீம் சிலாங்கூர் ஏற்பாட்டில் எஸ்.பி.எம். மாணவர்களுக்கு இலவச வகுப்புகள்



ஷா ஆலம் – குறைந்த வருமானம் பெறும் பி40 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவும் வகையில் 'ஸ்கோர்லா எஸ்.பி.எம்.' எனும் கல்வித் திட்டத்தை தன்னார்வலர் அமைப்பான டீம் சிலாங்கூர் இலவசமாக மேற்கொள்ளவுள்ளது.

ஸூம் மற்றும் கூகுள் மீட் தளங்களை மையமாக கொண்டு இயங்கலை வாயிலாக நடத்தப்படும் இந்த பாடத் திட்டத்தில் ஐந்து பாடங்களுக்கு 100 மாணவர்கள் மட்டுமே பங்கேற்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று அந்த அமைப்பின் கல்விப் பிரிவுத் தலைவர் முகமது ஹஸிப் ஃபிக்ரி ஜஸ்னி கூறினார்.

மலாய் மொழிப் பாடம் இம்மாதம் 13 ஆம் தேதி நடைபெறும் வேளையில் வரலாறு 14ஆம் தேதியும் ஆங்கிலம் மற்றும் கணிதம் 20 மற்றும் 21ஆம் தேதிகளிலும் இயற்பியல் 27ஆம் தேதியும் நடைபெறும் என்று அவர் தெரிவித்தார்.

முதலில் வருவோருக்கு முதல் சலுகை என்ற அடிப்படையில் இந்த இந்த பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளதால் ஒரு வகுப்பில் மட்டும் கலந்து கொள்ள முடியும் என்ற கட்டுப்பாடு மாணவர்களுக்கு விதிக்கப்படாது என்றும் அவர் சொன்னார்.

பயிற்சி பெற்ற மற்றும் கல்வித் துறையில் நீண்ட அனுபவம் கொண்ட ஆசிரியர்களால் இந்த வகுப்புகள் நடத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆர்வம் உள்ள மாணவர்கள் http://bit.ly/skorlah என்ற அகப்பக்கம் வாயிலாகவும் அல்லது 017-6127269 என்ற எண்களிலும் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் மேலும் கூறினார்.

# பண்டான் இண்டா, தாமான் கெஞ்சானா வெள்ளப் பிரச்னைக்கு தீர்வு



ஷா ஆலம் – பண்டான் இண்டா, தாமான் கெஞ்சானா வட்டார மக்கள் கடந்த 20 ஆண்டுகளாக எதிர் நோக்கி வந்த வெள்ளப் பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள ஒரு கிலோமீட்டர் தூர கால்வாய் தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அங்கு நிலவிய திடீர் வெள்ளப் பிரச்னை களையப்பட்டுள்ளதாக அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.

கடந்தாண்டு ஆரம்பிக்கப்பட்ட 12 லட்சம் வெள்ளி மதிப்பிலான இந்த மேம்பாட்டுத் திட்டம் கடந்த ஜனவரி மாதம் முற்றுப் பெற்றதாக அவர் சொன்னார்.

கால்வாயை தரம் உயர்த்தும் பணி மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து பண்டா இண்டா குறிப்பாக, தாமான் கெஞ்சானா பகுதி மக்கள் இதுநாள் வரை எதிர்நோக்கி வந்த வெள்ளப் பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றார் அவர். இத்திட்டத்தை விரைந்து மேற்கொள்வதில் பெரிதும் துணை புரிந்த அம்பாங் ஜெயா நகராண்மைக் கழகம் மற்றும் பொதுப்பணித்துறை ஆகிய தரப்பினருக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். கால்வாயை சீரமைக்கும் பணி கம்போங் செராஸ் பாரு முதல் பண்டான் இண்டா, தாமான் கெஞ்சானா வரை மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பண்டான் இண்டா வட்டாரத்தில் ஏற்படும் வெள்ளப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணும்படி அம்பாங் ஜெயா நகராண்மைக் கழகம் மற்றும் பொதுப்பணித்துறை துறைக்கு ஹிஷாம் ஹஷிம் உத்தரவிட்டிருந்தார்.

# பி.கே.பி. காலத்தில் முஸ்லீம் அல்லாதோர் வழிபாட்டுத் தலங்கள் செயல்பட அனுமதி



புத்ரா ஜெயா – நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமலில் இருக்கும் 12ஆம் தேதி முதல் 18 தேதி வரையிலான காலக்கட்டத்தில் முஸ்லீம் அல்லாதோருக்கான வழிபாட்டு தலங்களை திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. பிரதமர் டான் ஸ்ரீ மொகிடின் யாசின் தலைமையில் நடைபெற்ற சிறப்பு தேசிய பாதுகாப்பு மன்றக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தேசிய ஒற்றுமைத்துறை அமைச்சு அறிக்கை ஒன்றில் கூறியது.

எஸ்.ஓ.பி. எனப்படும் நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைக்கேற்ப வழிபாட்டு நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை தெரிவித்தது. ஒரு சமயத்தில் முப்பதுக்கும் குறைவான பக்தர்கள் மட்டுமே ஆலயத்தில் அனுமதிக்கப்பட வேண்டும், வழிபாடு அல்லது பூஜைகள் நடைபெற்ற முடிந்த ஒவ்வொரு முறையும் ஆலயத்தில் கிருமி நாசினி தெளிக்க வேண்டும் ஆகியவையும் அந்த நிபந்தனைகளில் அடங்கும். இது தவிர, பரந்த இணைய ஆற்றல் உள்ள பகுதிகளில் மைசெஜாத்ரா செயலி மூலம் தகவல்களை பதிந்து கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்திற்கு வரும் திறன்பேசியைக் கொண்டிராத 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் மட்டுமே மை செஜாத்ரா செயலியை பயன்படுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர். பெத்த, தோ, வாட் சியாம் ஆலயங்கள் மற்றும் கிறிஸ்துவ தேவாலயங்கள் அதிகாலை 6.00 மணி முதல் பிற்பகல் 2.00 வரை செயல்பட அனுமதிக்கப்படும். இந்து ஆலயங்களில் அதிகாலை 6.00 மணி முதல் காலை 10.00 மணி வரையிலும் மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் செயல்பட முடியும்.

### சிலாங்கூரில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்காக

# பத்து லட்சம் வெள்ளி ஒதுக்கீடு




ஷா ஆலம் – போதைப் பொருளுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகளை 'ஸ்பீக்' எனப்படும் சமூக பிரசார பணிக்குழு மாநிலம் முழுவதும் உள்ள 22 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் மேற்கொள்ளவுள்ளதாக போதைப் பொருள் தடுப்புச் சங்கத்தின் (பெமாடாம்) கெரவச் செயலாளர் டாயிங் முகமது ராடுவான் பாச்சோக் கூறினார்.

இந்த பிரசார பணிகளை மேற்கொள்வதற்காக அந்த அரசு சாரா அமைப்புக்கு சிலாங்கூர் மாநில அரசு பத்து லட்சம் வெள்ளியை இவ்வாண்டில் வழங்கியுள்ளதாக அவர் சொன்னார்.

போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் உண்மையில் நேர்மைறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதை உறுதி செய்வதற்காக தங்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு பணிகளை பெமாடாம் மற்றும் ஸ்பீக் ஆகிய அமைப்புகள் மறுஆய்வு செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். உறுதியான நிலைப்பாடும் விரிவான மற்றும் ஒருங்கிணைந்த உணர்வும் நமது வெற்றிக்கு அடித்தளமாக விளங்கும் என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார். இங்குள்ள மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சிலாங்கூர் மாநில அளவிலான போதைப் பொருள் எதிர்ப்பு மாதத்தை நிறைவு செய்யும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னதாக இந்நிகழ்வில் பேசிய மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி, ஸ்பீக் அமைப்பை உருவாக்கியதன் வழி மாநிலத்தில் போதைப் பொருள் நடவடிக்கைகளை துடைத்தொழிப்பதில் தங்களுக்கு உள்ள கடப்பாட்டை அரசு புலப்படுத்தியுள்ளதாக சொன்னார்.

# கிள்ளான் ஆற்றில் நீர் சுத்திகரிப்பு மையம் ஆயர் சிலாங்கூர் திட்டம்



ஷா ஆலம் – கிள்ளான் ஆற்றின் கீழ்நிலைப்பகுதியில் புதிதாக நீர் சுத்திகரிப்பு மையம் அமைக்க ஆயர் சிலாங்கூர் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

எதிர்காலத்தில் பயனீட்டாளர்களுக்கு கூடுதல் நீர் கிடைப்பதற்குரிய வாய்ப்பினை இந்த சுத்திகரிப்பு மையம் ஏற்படுத்தும் என்று ஆயர் சிலாங்கூர் நிறுவனம் கூறியது.

ஆற்றின் கீழ்நிலைப்பகுதியிலிருந்து நீரை உறிஞ்சி அதனை நீர் சேகரிப்பு குளங்களில் உயிரியல் முறையில் சுத்திகரித்து பின்னர் நீர் சுத்திகரிப்பு மையங்களில் வழக்கமான முறையில் சுத்திகரிப்பு பணியை மேற்கொள்வது உலகம் முழுவதும் உள்ள நீர் சுத்திகரிப்பாளர்களின் புதிய பாணியாக விளங்குகிறது என்று அந்நிறுவனம் தெரிவித்தது.

எதிர்கால நீர் பயனீட்டு வளமாக பயன்படுத்தப்படவிருக்கும் கிள்ளான் ஆற்று நீரின் தரம் குறித்து பலர் சமூக ஊடகங்கள் கேள்வியெழுப்பிருந்தது குறித்து அந்நிறுவனம் இவ்வாறு கருத்துரைத்தது.

இதனிடையே, இவ்விவகாரம் குறித்த சிலாங்கூர் கினியின் கேள்விக்கு பதிலளித்த ஆயர் சிலாங்கூர் நிறுவனப் பேச்சாளர் ஒருவர், இந்த நீர் சுத்திகரிப்புத் திட்டம் தொடர்பான மேல் விபரங்கள் விரைவில் வெளியிடப்படும் எனக்கூறினார்.

# ஐ-சினார் நிபந்தனைகள் ரத்து
# சேம நிதி மீட்க அதிக வாய்ப்பு

கோலாலம்பூர் – ஊழியர் சேம நிதி வாரியத்தின் (இ.பி.எஃப்.) முதல் கணக்கிலிருந்து மேலும் அதிகமானோர் பணத்தை மீட்பதற்கு ஏதுவாக ஐ-சினார் திட்ட நிபந்தனைகள் அகற்றப்படுவதாக நிதியமைச்சர் டத்தோ ஸ்ரீ ஸப்ரூல் துங்கு அப்துல் அஜிஸ் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை மேற்கோள் காட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்ட ஊழியர் சேம நிதி வாரியம், ஐ-சினார் ஆன்லைன் நிர்வாக முறை மற்றும் பரிசீலனை ஆகியவற்றை இந்த ஐ-சினார் விதிமுறை ரத்து உள்ளடக்கியிருக்கும் எனக் கூறியது. தற்போதைய நெருக்கடி நிலையை இ.பி.எஃப். சந்தாதாரர்கள் சமாளிப்பதற்கு ஏதுவாக சேமிப்பை மீட்கும் நடவடிக்கை எளிதானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்கும் வகையில் இந்த விதிமுறை ரத்து அறிவிக்கப்பட்டதாக அந்த அறிக்கை தெரிவித்தது. இந்த மாற்றம் நடைமுறைப்படுத்தப்படும் வரை பொறுமை காத்த சந்தாதாரர்களுக்கு இ.பி.எஃப். நன்றி தெரிவித்துக் கொண்டது. இவ்விவகாரம் தொடர்பான மேல் விபரங்களை இ.பி.எஃப். தனது அதிகாரத்துவ தொடர்பு சாதனங்கள் வழி விரைவில் வெளியிடும். இ.பி.எஃப். வெளியிடும் வெளியிடும் தகவல்களை மட்டுமே உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றும் நம்பகமற்ற தகவல்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கை அறிவுறுத்தியது.

### சுங்கை பூலோ தொகுதி ஏற்பாட்டில் பி40 பிரிவு மாணவர்களுக்கு

# ஓசேம் செயலி வழி இலவச மீள்பார்வை வசதி



கோத்தா டாமன்சாரா, பிப் 12- சுங்கை நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள வசதி குறைந்த பி40 பிரிவு மாணவர்கள் ஓசேம் செயலி வாயிலாக பாடங்களை 12 மாதங்களுக்கு இலவசமாக மீள்பார்வை செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுங்கை பூலோ நாடாளுமன்றத் தொகுதியிலுள்ள தேர்வு எழுதக்கூடிய சுமார் 5,000 பள்ளி மாணவர்கள் இந்த இலவச செயலியின் வழி பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுவதாக தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சிவராசா கூறினார்.

இதுவரை, ஆறு தொடக்கப் பள்ளிகள் மற்றும் ஏழு இடைநிலைப்பள்ளிகளைச் சேர்ந்த 1,422 மாணவர்கள் இந்த திட்டத்தின் வாயிலாக பயனடைந்துள்ளதாக அவர் சொன்னார்.

வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவ முன்வந்த ஓசேம் நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அத்தரப்பினரின் இந்த உதவி தேர்வை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு ஓரளவு உதவியாக அமையும் என்றார் அவர்.

சுங்கை பூலோ நாடாளுமன்றத் தொகுதியின் சேவை மையத்தில் இந்த ஓசேம் செயலியின் தொடக்க நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பி.எம்.ஆர்., பி.டி.3 மற்றும் எஸ்.பி.எம். தேர்வு எழுதும் மாணவர்களுக்கு விஷேசமாக இந்த மீள்பார்வை திட்டம் அமல்படுத்தப்படுகிறது. நாடு முழுவதும் உள்ள சுமார் 17,000 ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட இரண்டாயிரம் கேள்விகள் ஓசேம் செயலி வாயிலாக மாணவர்களுக்கு வழங்கப்படும்.

# பள்ளிகள் மீண்டும் திறக்கப்படுவதை ஒட்டி மதிப்பாய்வு செய்ய மந்திரி புசார் வருகை



கோம்பாக் – நேற்று தொடங்கி பள்ளிகள் மீண்டும் திறக்கப்படுவதை மதிப்பாய்வு செய்ய டத்தோ மந்திரி புசார் செகோலா கெபாங்சன் (எஸ்.கே) கோம்பாக் செத்தியாவுக்கு வருகையளித்தார்.

நேற்று முதல் நாடு முழுவதிலும் பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன, ஆரம்ப பள்ளிகளில் முதலாம் மற்றும் இரண்டாம் வகுப்புகள் தொடங்கி பின்னர் மார்ச் 8 முதல் மூன்றாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரையிலும், இடைநிலைப் பள்ளிகள் ஏப்ரல் 4 ஆம் தேதி ஜொகூர், கெடா, கிளாந்தன் மற்றும் திராங்கானு ஆகிய மாநிலங்களிலும், ஏனைய மாநிலங்களில் அதன் மறுநாளும் பள்ளி அமர்வுகளைத் தொடங்கும்.

நேற்று மதியம் 12.30 மணிக்கு வந்த மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி, வருகையாளர்கள் பாதைவழியாக பள்ளி சதுக்கத்திற்குச் சென்றார்.

அங்கு, முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு, அவர்கள் வகுப்புகளுக்குள் நுழைவதற்கு முன்பு மீண்டும் பயன்படுத்தக்கூடிய முகக்கவரிகள் மற்றும் கிருமிநாசினிகளைக் கொண்ட சிறப்பு பைகளை மாணவர்களுக்கு விநியோகிக்க 15 நிமிடங்கள் செலவிட்டார்.

இந்த விஜயத்தின் போது, கோவிட் -19 தொற்று நோயின் தாக்கம் இன்னும் உள்ளதால், மாணவர்களும் ஆசிரியர்களும் நடமாட்ட கட்டுப்பாடு ஆணை விதி முறைமைகளுக்கு (எஸ்ஓபி) இணங்கவும் சுய பாதுகாப்பைப் பராமரிக்கவும் அறிவுறுத்தப் பட்டது. அதிக எண்ணிக்கையை தவிர்க்க பள்ளிகள் 20 முதல் 30 விழுக்காடு மாணவர்களுடன் செயல்பட பாலர் பள்ளி மற்றும் ஒன்றாம் இரண்டாம் வகுப்புகள் மட்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அதுவும் பள்ளி இரண்டு அமர்வுகளுக்கு திறக்கப்பட்டுள்ளது, அதாவது பாலர் பள்ளி மாணவர்களுக்கு காலையிலும், ஒன்று மற்றும் இரண்டாம் ஆண்டு வகுப்பு மாணவர்களுக்கு மாலை, என்று செயல்படுவதாக அவர் கூறினார்.

# செந்தோசா தொகுதியில் சட்டவிரோதமாக குப்பை கொட்டும் 55 இடங்கள் கண்டுபிடிப்பு

கிள்ளான்– செந்தோசா சட்டமன்றத் தொகுதியில் சட்டவிரோதமாக குப்பை கொட்டும் 55 இடங்களை சிலாங்கூரில் குப்பைகளை அகற்றும் பணிக்கு பொறுப்பேற்றுள்ள கும்புலான் டாருள் ஏசான் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனம் கடந்தாண்டில் அடையாளம் கண்டுள்ளது. சுங்கை ஜாத்தி, புக்கிட் நெனாஸ். லபோஹான் டகாங், அண்டலாஸ் ஆகிய பகுதிகள் குப்பைகள் கொட்டும் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகி முகமது இட்ரிஸ் முகமது யூசுப் கூறினார். இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக சிறப்பு பணிக்குழு ஒன்று ஆறு மாத காலத்தில் ஆரம்பிக்கப்படும் என்று அவர் சொன்னார். இந்நோக்கத்திற்காக கூடுதல் நிதி ஒதுக்கப்படும். சட்டவிரோதமாக குப்பைகளை கொட்டும் செயல்கள் தொடரும் என்றபோதிலும் அதனைக் கட்டுப்படுத்துவதில் தமது நிறுவனம் கடப்பாடு கொண்டுள்ளது என்றார் அவர்.

கடந்தாண்டு செப்டம்பர் மாதம் வரை சட்டவிரோதமாக குப்பை கொட்டுவது தொடர்பில் 874 புகார்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஊராட்சி மன்றங்களுக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின் போது கூறியிருந்தார். கிள்ளானில் அதிகமாக அதாவது 346 சம்பவங்கள் கண்டறியப்பட்டதாக கூறிய அவர், இக்குற்றங்களைப் புரிந்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டதாக சொன்னார்.

# உயர்கல்வி மாணவர் வெகுமதி திட்டத்திற்கு விரைந்து

## விண்ணப்பம் செய்வீர்- மந்திரி புசார் வேண்டுகோள்

ஷா ஆலம்– சிலாங்கூர் மாநில உயர்கல்விக்கூட மாணவர்களுக்கான 1,000 வெள்ளி வெகுமதி திட்டத்திற்கு விரைந்து விண்ணப்பம் செய்யும்படி மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கேட்டுக் கொண்டார்.

உயர்கல்விக் கூடங்களில் நுழையும் மாணவர்களுக்கு ஏற்படும் நிதிச் சுமையை குறைக்கும் நோக்கில் இந்த நிதியதவித் திட்டம் அமல்படுத்தப்படுவதாக அவர் சொன்னார். இம்மாதம் 31ஆம் தேதிக்குள் இதற்கான விண்ணப்பதை சமர்ப்பிக்கும்படியும் அவர் மாணவர்களை கேட்டுக் கொண்டார்.

மாதம் 5,000 வெள்ளிக்கும் குறைவாக வருமானம் பெறும் சிலாங்கூர்வாசிகளின் பிள்ளைகள் இந்த வெகுமதி திட்டத்திற்கு விண்ணப்பம் செய்ய முடியும்.

அரசாங்க அல்லது தனியார் உயர் கல்விக் கூடங்களில் இளங்கலை பட்டப்படிப்பு, டிப்ளோமா மற்றும் நான்காம் கட்ட திறன் சான்றிதழ் பயிற்சியை முழுநேரமாக மேற்கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கப்பெற்ற முதலாம் ஆண்டு மாணவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பம் செய்ய முடியும்.

சிலாங்கூர் மாநிலத்தில் பிறந்தவர்கள் தவிர்த்து, இம்மாநிலத்தில் ஓராண்டிற்கும் மேலாக வசிப்பவர்களும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். மலேசியர்களாகவும் எஸ்.பி.எம். தேர்வுச் சான்றிதழ் கொண்டிருப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது மற்றொரு நிபந்தனையாகும்.

தகுதி உள்ள மாணவர்கள் மார்ச் 1 தேதி முதல் 31ஆம் தேதிக்குள் hpipt.selangor.gov.my எனும் அகப்பக்கம் வாயிலாக இதற்கான விண்ணப்பத்தை செய்ய வேண்டும்.

தங்களிடமுள்ள கூடுதல் ஆவணங்களை Urus Setia HPIPT Bahagian Sumber Manusia, Tingkat 3 Bangunan Sultan salahuddin Abdul Aziz Shah, 40503 Shah Alam, Selangor எனும் முகவரிக்கு அனுப்பும்படி மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அரசாங்க மற்றும் தனியார் உயர்கல்விக் கூடங்களில் கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்பு கிடைத்த வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு உதவும் நோக்கில் இந்த உதவி நிதித் திட்டம் கடந்த 2008ஆம் ஆண்டில் சிலாங்கூர் அரசினால் தொடக்கப்பட்டது.

# கோத்தா கெமுனிங் தொகுதி ஏற்பாட்டில் 70 வெள்ளி கட்டணத்தில் கோவிட்-19 பரிசோதனை



ஷா ஆலம் – கோத்தா கெமுனிங் சட்டமன்ற தொகுதி சுற்றுவட்டார மக்களுக்கு 70 வெள்ளி கட்டணத்தில் கோவிட்-19 பரிசோதனை இயக்கத்தை மேற்கொள்கிறது. இத்தகைய பரிசோதனையின் வழி கோவிட்-19 நோய்த் தொற்று சம்பவங்களை கட்டுப்படுத்தும் அதேவேளையில் மக்களின் சுமையையும் குறைக்கவும் இயலும் என்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வீ. கணபதிராவ் கூறினார். நான்கு தனியார் கிளினிக்குகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் இந்த பரிசோதனை இயக்கம் இன்று தொடங்கி இம்மாதம் 28 ஆம் தேதி வரை காலை மணி 10.00 முதல் மாலை 5.00 நடைபெறும் என்று அவர் சொன்னார்.

இதற்கு முன்னர், பல சட்டமன்ற உறுப்பினர்கள் கோவிட்-19 நோய்த் தொற்றை தடுக்கும் முயற்சியாக இத்தகைய கோவிட்-19 பரிசோதனை இயக்கங்களை மேற்கொண்டுள்ளனர். கோவிட்-19 பரிசோதனையை மேற்கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட கிளினிக்குகளை அணுகலாம்.

**1.Klinik Metro**
No 31, Jalan Anggerik Vanilla, Kota Kemuning,
40460 Shah Alam, Selangor
03-5131 3459

**2.Klinik dan Surgeri Berjaya Park**
No 39-G, Jalan Sungai Rasau,
F 32/F Berjaya Park, Seksyen 32,
40460 Shah Alam, Selangor.
03-5888 9938

**3.Klinik Pro Medic**
40, Jalan Anggerik Vanilla M 31/M,
Kota Kemuning,
40460 Shah Alam, Selangor
03-5131 1101

**4. Poliklinik Shaik**
36-1, No, 8, Jln Anggerik Vanilla BE 31/BE, Kota Kemuning,
40460 Shah Alam, Selangor
03-5122 9030

# 2022 தொடக்கத்தில் கோவிட்-19 பெருந்தொற்று முடிவுக்கு வரும்
# உலக சுகாதார நிறுவனம் கணிப்பு

கோப்பன்ஹெகன் – கோவிட்-19 பெருந்தொற்று வரும் 2022ஆம் ஆண்டு தொடக்கத்தில் முடிவுக்கு வரும் என்று நம்பப்படுவதாக உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பிய பிராந்திய இயக்குநர் ஹான்ஸ் கிளேக் கூறினார்.

கோவிட்-19 பெருந்தொற்றின் பரவல் 2021ஆம் ஆண்டிலும் தொடரும். எனினும், அது கடந்தாண்டை விட கட்டுப்பாட்டில் இருக்கும் என்று டென்மார்க் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.

மோசமான காலக்கட்டத்தை நாம் கடந்து விட்டோம் எனக் கூறிய அவர், 2020 தொடக்க காலத்தைக் காட்டிலும் இப்போது அந்நோய்த் தொற்று குறித்த நிறைய தகவல்கள் நமக்கு கிடைத்துள்ளன என்றார். எனினும், கோவிட்-19 பெருந்தொற்றின் எதிர்காலம் குறித்து யாராலும் கணித்துக் கூற முடியாது என்றும் அவர் நினைவுறுத்தினார்.

நோய்த் தொற்று தொடர்ந்து இருக்கும். எனினும், அதனை எதிர்கொள்ள கட்டுப்பாடுகள் தேவைப்படாது. இதுவே நம்பிக்கையூட்டும் சமிக்ஞையாகும் என்றார் அவர். உருமாறிய வைரஸ் என்பது வழக்கமான ஒன்றுதான். நோய்த் தொற்று கண்டவரின் உடலில் வைரஸ் தன்னை பழக்கப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கையே இதுவாகும்.

எனினும், அதிவிரைவான வைரஸ் உருமாற்றம் குறித்துதான் நாம் அச்சப்பட வேண்டும் எனவும் அவர் சொன்னார். அதிவிரைவாக பரவும் வைரஸ் கிருமிகளை எதிர்கொள்வதற்காக




தயாரிக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பூசிகளின் அக்கத் தன்மை குறித்து உலக சுகாதார நிறுவனம் கண்காணித்து வருவதாகவும் ஹான்ஸ் கூறினார்.

## பி.டி.பி.ஆர். திட்டம் நகர்ப்புற-கிராமப்புற மாணவர்களிடையே கல்வி இடைவெளியை அதிகரிக்கும்- அன்வார் கருத்து



ஷா ஆலம் – வீட்டிலிருந்து கற்றல், கற்பித்தல் திட்டம் (பி.டி.பி.ஆர்.) நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களிடையே கல்வி இடைவெளியை அதிகரிக்கச் செய்யும் என்று எதிர்க்கட்சித் தலைவர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

இணைய வசதி மற்றும் கணினி போன்ற உபகரணங்கள் இல்லாத காரணத்தால் சுமார் எட்டு லட்சம் மாணவர்களும் பெற்றோர்களும் இந்த பி.டி.பி,ஆர். திட்டத்திற்கு தயார்படுத்திக் கொள்ள இயலாத நிலையில் உள்ளதை மலேசிய தேசிய பல்கலைக்கழக ஆய்வுகள் காட்டுவதாக அவர் சொன்னார்.

பலவீனமான திட்டமிடல் மற்றும் பெற்றோர்கள், பள்ளி நிர்வாகங்களுடன் கலந்தாலோசிக்காமல் எடுக்கப்பட்ட முடிவுகள் காரணமாக இத்திட்ட அமலாக்கத்தில் குழப்ப நிலை நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புற மாணவர்களைக் காட்டிலும் நகர்ப்புற மாணவர்கள் கூடுதலான கல்வி வாய்ப்புகளைப் பெறும் போது கல்வியில் சமநிலையற்றப் போக்கு ஏற்பட்டு ஒரு தரப்பினருக்கு இழப்பு ஏற்படும் என்றார் அவர்.

முகநூல் வாயிலாக நடைபெற்ற விவாத நிகழ்வில் கலந்து கொண்ட போது கெஅடிலான் கட்சியின் தலைவருமான அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்வி விவகாரங்கள் குறிப்பாக வீட்டிலிருந்து கற்றல், கற்பித்தலை மேற்கொள்ளும் திட்டம் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்பட பல்வேறு தரப்பினர் மத்தியில் எதிர்மறையான கருத்துக்களை தோற்றுவித்துள்ளன என்றும் அவர் சொன்னார்.

கடந்த காலங்களில் முறையான திட்டமிடல் இன்றி எடுக்கப்பட்ட முடிவுகளால் உண்டான பாதிப்புகளை நாம் படிப்பினையாகக் கொள்ள வேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக அனைத்து ஆரம்பப் பள்ளி மாணவர்களும் முதல் படிவம் முதல் நான்காம் படிவம் வரையிலான மாணவர்களும் ஜனவரி 20 ஆம் தேதி முதல் வீட்டிலிருந்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது.

## குப்பைத் தொட்டி வைக்காத கடைகளுக்கு 1,000 வெள்ளி அபராதம்

கிள்ளான் – குப்பைத் தொட்டி வைத்திராத கடைகளுக்கு ஆயிரம் வெள்ளி வரை அபராதம் விதிக்கப்படும் என கிள்ளான் நகராண்மைக் கழகம் எச்சரித்துள்ளது. வர்த்தக மையங்களில் தூய்மையின்மைப் பிரச்சனை தொடர்வதை தடுக்கும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக நகராண்மைக் கழகத்தின் சுற்றுச்சூழல் சேவை பிரிவு இயக்குநர் ஜைரிசால் அகமது ஜைனுடின் கூறினார்.

வர்த்தக மையங்களில் குப்பைத் தொட்டி வைக்க வேண்டும் என்பது லைசன்ஸ் விண்ணப்பத்தில் இடம் பெற்றுள்ள முக்கிய நிபந்தனையாகும். ஆகவே, அமலாக்க நடவடிக்கைகள் தவிர்த்து அடிக்கடி திடீர் சோதனைகளையும் நடத்தவுள்ளோம் என்றார் அவர்.

இத்தகைய குற்றங்களுக்கு ஊராட்சி மன்றங்களின் துணைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, கடைகளில் குப்பைத் தொட்டிகளை வைக்கக் கோரும் அறிக்கை இம்மாதம் 18ஆம் தேதி அனைத்து வியாபாரிகளுக்கும் அனுப்பப்பட்டு விட்டதாக செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் தெரிவித்தார். இந்த அறிக்கை கிடைக்கப் பெற்ற ஏழு நாட்களுக்குள் 240 கன மீட்டர் கொள்ளலவு கொண்ட மூடியுடன் கூடிய குப்பைத் தொட்டியை வணிகர்கள் தயார் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்

## ஹிஜ்ரா கடனுதவித் திட்டத்திற்கான விண்ணப்ப பாரங்களை ஹிஜ்ரா கிளை அலுவலகங்களில் பெறலாம்

ஷா ஆலம் – புதிதாக வியாபாரத்தை தொடக்க விரும்புவோருக்கான ஹிஜ்ரா சிலாங்கூர் கடனுதவித் திட்ட விண்ணப்பபாரங்கள் மாநிலம் முழுவதும் உள்ள ஹிஜ்ரா கிளைகள் வாயிலாக விநியோகம் செய்யப்படுகின்றன.

மைக்ரோகிரடிட், நியாகா டாருள் ஏசான் (நாடி) மற்றும் கோ டிஜிட்டல் கடனுதவித் திட்டங்களுக்கான விண்ணப்பபாரங்கள் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காலத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 மணி தொடங்கி பிற்பகல் 1.00 மணி வரை விநியோகிக்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

விண்ணப்ப பாரங்களைப் பெற விரும்புவோர் தங்களின் வருகை நேரத்தை முன்கூட்டியே தொலைபேசி வழி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

புதிதாக வியாபாரம் செய்யத் தொடங்குவோர் குறைந்தது ஆயிரம் வெள்ளியை கடனுதவியாக பெறுவதற்கு வகை செய்யும் நாடி திட்டத்திற்கு ஒரு கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்படுவதாக மந்திரி புசார், 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது அறிவித்திருந்தார்.

ஊராட்சி மன்றங்களிடமிருந்து தற்காலிக லைசென்ஸ் பெற்று வியாபாரம் செய்ய வகை செய்யும் இத்திட்டத்தின் வழி மூவாயிரம் பேர் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப் படுகிறது. தற்போது வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ள சுமார் மூவாயிரம் பேர் தங்களின் வர்த்தக நோக்கத்திற்காக தகவல் தொடர்பு சாதனங்களை வாங்க இந்த கோ டிஜிட்டல் திட்டம் உதவி புரிகிறது. புதிதாக வர்த்தகத்தை தொடங்குவோருக்கு மைக்ரோகிரடிட் திட்டத்தின் வழி கடனுதவி வழங்கப்படுகிறது.

# சிலாங்கூர் எப்சி ஆசிய போட்டிகளுக்கு தகுதி பெற இலக்காகக் கொண்டுள்ளது

ஷா ஆலம்: ஆசிய அளவில் தகுதி பெறுவதற்காக இந்த பருவத்தில் சூப்பர் லீக்கில் சிறந்த இடத்தைப் பெற சிலாங்கூர் எப்சி இலக்கு வைத்துள்ளது என்று அதன் மேலாளர் தெரிவித்தார்.

"சிகப்பு ஜயண்ட்" என்ற அடையாளத்தை கொண்டுள்ள குழு பின்னால் உள்ள ஆதரவாளர்களின் விசுவாசத்தை, நம்பிக்கையை மெய்ப்பிக்கும் வண்ணம் குறுகிய கால பயிற்சியை மேற்கொண்ட போதிலும், வீரர்கள் காட்டிய ஆர்வத்தின் அடிப்படையில் இந்த நம்பிக்கை அமைந்துள்ளது என்று மஹ்பிசுல் ருசிடின் கூறினார்.




மத்திய திடல் ஆட்டக்காரர், நிக் முஹம்மது ஷெரீப் ஹஸீபியின் கணுக்கால் காயம் மட்டுமே மீட்க குறைந்தபட்சம் ஆறு வாரங்கள் தேவைப்பட்டது, அணியின் தயார் நிலையை சற்று பாதித்தது. ஆனால் ஒட்டுமொத்தமாக, இந்த சனிக்கிழமை பெட்டாலிங் ஜெயா நகர சபை மைதானத்தில் ஸ்ரீ பஹாங்கிற்கு எதிரான முதல் போட்டியில் விளையாட வீரர்கள் தயாராக உள்ளனர்" என்று அவர் இன்று சிலாங்கூர்கினியிடம் தெரிவித்தார்.

சூப்பர் லீக்கை வென்ற அணி ஆசிய சாம்பியன்ஸ் கோப்பையில் போட்டியிட தகுதி பெறும், அதே நேரத்தில் AFC கோப்பை ரன்னர்-அப் ஆக இருக்கும்.

முன்னதாக, சிலாங்கூர் கால்பந்து சங்கம் (எப்ஏஎஸ்) 2021 சீசன் போட்டிக்கு சிகப்பு ஜயண்ட்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக கார்ஸ்டன் நீட்சலை நியமிப்பதாக அறிவித்தது.

போட்சம் வி.எஃப்.எல் அணியை நிர்வகிப்பதில் எஸ். வி. எலிவர்ஸ்பெர்க் மற்றும் ஹோல்ஸ்டீன் கீலை ஜெர்மன் லீக்கின் இரண்டாவது பிரிவுக்கு கொண்டு வருவதில் நீட்செல் அனுபவம் பெற்றவர்.

அவர் பன்டெஸ்லிகாவில் ஃப்ரீபர்க் அணிக்காகவும் விளையாடினார்.

# சுக்மா விளையாட்டாளர்களுக்கான வயது வரம்பை விரைந்து நிர்ணயிக்கக் கோரிக்கை




ஷா ஆலம் - ஜோகூர் மாநிலத்தில் வரும் 2022 ஆம் ஆண்டு நடைபெறும் சுக்மா எனப்படும் மலேசிய போட்டி விளையாட்டுகளில் பங்கேற்கும் விளையாட்டாளர்களுக்கான வயது வரம்பை விரைந்து நிர்ணயிக்கும்படி இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஈராண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் அந்த போட்டியில் பங்கேற்பதற்கு தகுதி உள்ள விளையாட்டாளர்களை உறுதி செய்வதற்காக உயர் மட்டக் குழுவின் முடிவுக்காக தாங்கள் காத்திருப்பதாக சிலாங்கூர் விளையாட்டு மன்றத்தின் நிர்வாக இயக்குனர் முகமது நிசாம் மர்ஜூகி கூறினார்.

விளையாட்டாளர்களுக்கான வயது வரம்பு தொடர்பான விதிமுறைகளை நாங்கள் இன்னும் பெறவில்லை. விளையாட்டு வாரியக் கூட்டம் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற போதிலும் அதன் விபரங்களை அவர்கள் இதுவரை வெளியிடவில்லை என்று அவர் சொன்னார்.

ஆகவே, விளையாட்டாளர்களை தயார் படுத்துவதற்கு ஏதுவாக இவ்விவகாரம் தொடர்பில் விரைந்து முடிவெடுக்கும்படி சம்பந்தப்பட்ட தரப்பினரை நாங்கள் வலியுறுத்தியுள்ளோம் என்று என்றார் அவர்.

கடந்தாண்டு ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதம் நடைபெறவிருந்த சுக்மா போட்டி கோவிட்-19 நோய்த் தொற்று பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு சுக்மா போட்டியை ஏற்று நடத்த ஜோகூர் மாநிலத்திற்கு இம்முறை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. திட்டமிடல், நிர்வாகம், நுட்பம் மற்றும் அடிப்படை வசதிகள் போன்ற அம்சங்களில் 99 விழுக்காடு தயார் நிலையில் அம்மாநிலம் உள்ளது.

இப்போட்டியில் பங்கேற்பதற்கான வயது வரம்பு 21 வயது ஆகும். எனினும், ஜிம்னாஸ்டிக் போன்ற விளையாட்டுகளுக்கு வயது வரம்பு 15ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# இயங்கலை வாயிலாக சதுரங்கப் போட்டி சிலாங்கூர் அரசு ஏற்பாடு

ஷா ஆலம், பிப் 28- சிலாங்கூர் மாநில அரசு சதுரங்கப் போட்டியை இயங்கலை வாயிலாக நடத்தவுள்ளது. இப்போட்டிக்கு மொத்த பரிசுத் தொகையாக 33,960 வெள்ளி வழங்கப்படும் என்று அது அறிவித்துள்ளது.

கிராண்ட் பிரிக்ஸ் எக்டிவி 2021 எனும் தொடரில் முதல் கட்டமாக நடைபெறும் இந்த சதுரங்கப்போட்டி வரும் ஏப்ரல் மாதம் 10 மற்றும் 11 ஆம் தேதிகளில் நடைபெறும் என்று விளையாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது கைருடின் ஒத்மான் கூறினார்.

இந்த போட்டி 12 வயதுக்கும் கீழ்ப்பட்ட மகளிர் மற்றும் 18 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கான பொது நிலை என இரு பிரிவுகளாக நடத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

கிராண்ட் பிரிக்ஸ் பிளஸ் 1 மற்றும் கிராண்ட் பிரிக்ஸ் பைனல் போட்டிகள் நான்கு தொடர்களைக் கொண்டுள்ளன.

சதுரங்கப் போட்டியில் தங்களுக்குள்ள திறமையை வெளிக் கொணர்வதற்குரிய அரிய வாய்ப்பு போட்டியாளர்களுக்கு கிட்டியுள்ளது என்று அவர் மேலும் சொன்னார்.

இந்த போட்டியை நடத்துவதற்கு சிலாங்கூர் மாநில விளையாட்டு மன்றமும் மலேசிய சதுரங்க சங்கமும் ஒத்துழைப்பு நல்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இப்போட்டியில் பங்கேற்க விரும்புவோர் 016-3382542 என்ற எண்களில் நஜிப் அப்துல் வஹாப் மற்றும் 107-5645183 என்ற எண்ணில் இவான் சானி இப்னு ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

மேலும் mcfsecretariat@malaysiachess.org/ inquiries@malaysiachess.org அகப்பக்கம் வாயிலாக வரும் மார்ச் 29ஆம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ளலாம்.

Diterbit oleh Media Selangor Sdn Bhd Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 13/8, Seksyen 14, 40000 Shah Alam -Dicetak oleh POLARVISTA Sdn.Bhd. 15, Jalan 6/118C, Desa Tun Razak, 56000 Cheras, Kuala Lumpur. Tel: 03-91731434 Fax-03-91731412